# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு
டிசம்பர் - 2010 விலை ரூ.10/-






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில்
**12.12.2010** அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில்,
கோவை மாநகரில் **543** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி,
புதிய கட்டடங்களை காணொலிக் காட்சி (video conferencing) மூலம்
தொடங்கி வைத்தார்கள்.

# தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041

கார்த்திகை - மார்கழி

டிசம்பர் - 2010

மலர் : 42 இதழ் : 6



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**எஸ்.பி. எழிலழகன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**பா. பாலசுப்பிரமணியன்**
**பொ.க. பாண்டியன்**

உதவி ஆசிரியர்கள்

**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**
**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை,
சென்னை-600 002.



தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**

விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித்
திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு
எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை .

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


* ஏழைகளுக்காகவும், நலிந்தோருக்காகவும் தன் வாழ்வை ஒப்படைத்தவர் அன்னை தெரசா .... 2
* இந்தியக் குடியரசுத்தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழா .... 7
* கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.543 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ள புதிய கட்டமைப்புகள் .... 10
* தமிழக அரசின் தொடர் முயற்சியால் அகல ரயில் பாதைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன .... 12
* மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையின் அவசரக் கூட்டம் .... 14
* மத்தியக் குழுவினர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை .... 16
* கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகள் .... 19
* மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம் .... 20
* நீதித்துறை பயிற்சி மண்டல மையம் மற்றும் மாற்றுத் தீர்வுமுறை மையம் அடிக்கல் நாட்டு விழா .... 23
* பள்ளிக்கல்வித்துறையில் 1,103 நபர்களுக்கு பணிநியமன ஆணை .... 26
* வேலூர் மாவட்டம் – சமத்துவபுரம் திறப்பு விழா .... 28
* தமிழகம் முழுவதும் இணையதளத்தில் மின்கட்டணம் செலுத்தும் வசதி .... 42


அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை**

**அன்னை தெரசா நூற்றாண்டு விழா (4.12.2010)**

# ஏழைகளுக்காகவும், நலிந்தோருக்காகவும் தன் வாழ்வை ஒப்படைத்தவர்

# அன்னை தெரசா

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், 04–12–2010 அன்று நடைபெற்ற **அன்னை தெரசா நூற்றாண்டு விழாவில்** மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

அன்னை தெரசாவினுடைய நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் – ஏன்; தமிழ்நாட்டு மக்களின் சார்பில் சீரோடும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நானும் கலந்து கொண்டு சில கருத்துகளைச் சொல்லுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த




மகிழ்ச்சி யடைகின்றேன். இந்த வாய்ப்பை விரைவிலே எனக்கு அளிப்பதற்காக, தாங்கள் பேசாமல் எனக்கு விட்டுக் கொடுத்து ஒதுங்கிக் கொண்டிருக்கின்ற தம்பி ஸ்டாலினுக்கும், தம்பி தயாநிதி மாறனுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் விட்டுக் கொடுக்காவிட்டால்; நான் இவ்வளவு விரைவில் உங்களிடத்திலே உரையாற்ற வந்திருக்க முடியாது. எனவே, வயதானவர்கள் இளைஞர்களுக்கு

விட்டுக் கொடுக்க வேண்டுமென்ற அந்தக் காலத்தை மாற்றி இளைஞர்கள் வயதானவர்களுக்கு விட்டுக் கொடுக்கின்ற காலம் வந்திருக்கிறது. இந்தக் காலம் தொடரட்டும் என்று தன்னலத்தின் காரணமாக நான் வாழ்த்துகின்றேன்.

**அன்னை தெரசாவின் தியாகங்கள்**

அன்னை தெரசா அவர்களைப் பற்றித் தமிழகத்தில் நாம் பேசுகிறோம் – அவருக்கு விழா இந்த விழாவைக் கொண்டாடி, அன்னை தெரசாவினுடைய அரும்பெரும் தியாகங்களைப் போற்றி, அவரது வழி நடப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்டால் மாத்திரம் போதாது – எடுத்துக் கொண்ட உறுதியைக் காற்றிலே பறக்க விடாமல், தேர்தல் காலத்து உறுதியாக ஆக்காமல், என்றென்றும் அதை நெஞ்சிலே நிறுத்தி, அந்த உறுதியை நிறைவேற்றுவோம் – நடைமுறைப்படுத்துவோம் என்று இந்நாளில் உங்களோடு சேர்ந்து நான் உறுதி எடுத்துக் கொள்கின்றேன்.



இந்த அரசின் சார்பில் கோலாகலமாக இந்த மாபெரும் மண்டபத்தில் நம்முடைய அகில இந்திய தலைவர்களிலே ஒருவரான ஆஸ்கர் பெர்னாண்டஸ் அவர்களும் கலந்து கொள்கின்ற அளவிற்கு இந்த விழா சிறப்பாக அமைவதற்கு மூலகர்த்தாவாக இருந்தவரை நான் இங்கே சொல்லாமல் விட்டால், நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளாவேன். இப்படி ஒரு விழாவை நடத்த

வேண்டுமென்று முதலில் தூண்டுதல் செய்தவரே, என்னுடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்தான். எனவே, அவருக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொண்டாடுகின்றோம். அவர்களுடைய அருமை, பெருமைகளையெல்லாம், ஆற்றல்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவ்வழியில் அனைவரும் நடக்க வேண்டுமென்று உறுதி எடுத்துக் கொள்கின்றோம் இந்த நன்னாளில். ஆனால், நாம் ஒரு நாள் மாத்திரம்

நான் சிறுபான்மைச் சமுதாயத்தை என்றைக்குமே பாராட்டுபவன் – ஆதரிப்பவன். அந்தச் சமுதாயத்

திற்காக இன்று நேற்றல்ல – நீண்ட நெடுங்காலமாக உழைத்துக் கொண்டிருப்பவன். நானும் பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் அல்ல – சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவன். மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் – மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன். நான் முதன்முதலாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபோது, சட்டப் பேரவையிலே சொன்னேன் – என்னுடைய பெருமை என்று எனக்கு ஒன்றுமில்லை; ''மிக மிக'' என்று எத்தனை ''மிக'' வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன் நான். எனவே, என்னுடைய அரசியல் வாழ்க்கையில் ஆகட்டும் – அல்லது அமைச்சர் பொறுப்பில் ஆகட்டும் – அல்லது ஆட்சியில் ஆகட்டும் – அந்தச் சமுதாயத்திற்காகப் போராடுவேன் – வெற்றிகளைக் குவிப்பேன் – அந்தச் சமுதாயத்திற்கு வெற்றி கிடைக்கும் வரையில் ஓயமாட்டேன் என்று சட்டப்பேரவையிலேயே சூளுரை மேற்கொண்டவன் நான் என்பதை இந்த நாடு நன்கறியும் – தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்க முடியாது.

அப்படிப்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்திற்காக, அந்தச் சமுதாயத்திலே பிறந்த தாய் – உலகத்தின் அன்னை என்று போற்றப்படுகின்ற தெரசா அவர்களுடைய நூற்றாண்டு விழா என்றால் மகிழாமல் இருக்கமுடியாது. அதை நினைத்து உறுதிகளை மேற்கொள்ளாமல் இருக்க முடியாது. அன்னை தெரசா ஈவு இரக்கமுள்ள நெஞ்சுக்குச் சொந்தக்காரர் – அன்னை தெரசா கருணையின் வடிவம் – அன்னை தெரசா ஈகையின் உருவம் – அன்னை தெரசா ஏழைகளைக் கண்டு இரங்குகின்ற சுபாவம் படைத்தவர் – அன்னை தெரசா நோயாளிகளைப் பார்த்தால், அந்த நோய் தனக்கே வந்தது என்று எண்ணிக் கவலைப்படுபவர். அப்படிப்பட்ட அருமையான ஒரு மாதரசி அன்னை தெரசா அவர்கள். அன்னை ''தெரசா'' என்று ஒருவர்தான் இருக்க முடியும். வேறு சில அன்னைகளுக்கு உள்ளம் ''தரிசாக'' இருக்கும். ''தரிசாக'' இருப்பதெல்லாம், தெரசா அல்ல. உண்மையிலேயே நல்லுள்ளம் படைத்த, உண்மையிலேயே இனிய இதயம் படைத்த, உண்மையிலேயே இளகிய இதயம் படைத்த, உண்மையிலேயே ஈவு இரக்கம் கொண்ட இதயத்திற்குச் சொந்தக்காரர் அன்னை தெரசா ஆவார்கள்.

அவர்களுடைய புகழுக்கு அவர் பெற்ற விருதுகளே சான்று. 1962–இல் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது அவருக்குக் கிடைத்தது. பிலிப்பைன்ஸ் நாட்டின் ராமோன் மாக்சாய்சாய் பரிசு அவருக்குக் கிடைத்தது. 1971–இல் போப் ஆண்டவர் வழங்கிய உலக அமைதிக்கான பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. அமெரிக்க நாட்டின் 'குட் சமாரிடன்' விருது அவருக்குக் கிடைத்தது. ''ஜான் எப்.கென்னடி அனைத்துலகப் பரிசு'' அவருக்கு வழங்கப்பட்டது. 1972–இல் புதுடெல்லியில் பண்டித ஜவகர்லால் நேரு பெயரால் ''உலக ஒப்புரவுப் பரிசு'' அவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்து நாட்டின் 'டெம்பிள்டன்' பரிசு அவருக்குக் கிடைத்தது. 1978–இல் இங்கிலாந்து அரசு வழங்கிய 'ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் எம்பயர்' விருது அவருக்குக் கிட்டியது. 1979–இல் நார்வே நாட்டின் உலக அமைதிக்கான ''நோபல் பரிசு'' அவர் பெற்றார். இந்தியத் திருநாட்டின் மிக உயரிய விருதான ''பாரத ரத்னா'' விருது அவர் பெற்றார். இப்படி பல விருதுகளைப் பெற்றார். ''பத்மஸ்ரீ'' விருது பெற்ற காலத்தில், எவ்வளவோ பெரிய விருதாக அது பாராட்டப்பட்டிருக்கும். ஆனால், அப்போது – பிறகு அவர் ''பாரத ரத்னா'' விருது பெறப் போகிறார் என்று யாரும் கருதியிருக்கமாட்டார்கள் – அந்த விருதையும் பெற்ற மாமணிதான் அன்னை தெரசா அவர்கள். அவருடைய வாழ்க்கை ஏழைகளுக்காகவே – இங்கே பேசிய நம்முடைய காதர் மொகிதீன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அன்னை தெரசாவினுடைய வாழ்க்கையே ஏழைகளுக்காக ஒப்படைக்கப்பட்டது. அவர்களுடைய எண்ணம், கருத்து, தொண்டு, செயல், சேவை – இவைகள் ஏழைகளுக்காக என்று சொன்னால், அதைவிடச் சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், அவருடைய வாழ்க்கையே ஏழைகளுக்காகத்தான் – நலிந்தோருக்காகத்தான் – நலிவுற்றவர்களுக்காகத்தான் – வேதனைப்படுகின்ற மக்களுக்காகத்தான்.

இராமலிங்க அடிகளார் – ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்றாரே, அப்படி வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர்தான் நம்முடைய அன்னை தெரசா அவர்கள். அத்தகைய அன்னையாருக்கு இன்றைக்கு நாம் எடுத்துள்ள இந்த விழா போதாது – நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டினார்கள். இந்தியாவிற்கு மாத்திரமல்ல – உலகத்திற்கே அன்னையாக விளங்கியவர் அன்னை

தெரசா. ஆனால், இந்தியாவிலே, ஒரு மாநிலத்திலே, தமிழ்நாட்டிலேதான் அவருக்காக ஒரு நாள் குறிப்பிடப்பட்டு, இன்றைக்கு இந்தச் சிறப்புக்குரிய விழா கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் இந்த விழா நடைபெற்றிருக்க வேண்டும் – இந்திய அளவில் நடைபெற்றிருக்க வேண்டும். அதைத்தான் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், மத்திய அரசை விட்டுக் கொடுக்காமல், “மத்திய அரசின் சார்பில் நாங்கள் ஏற்கெனவே அன்னை தெரசா உருவம் பொறித்த நாணயம்'' வெளியிட்டு விட்டோம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். நாணயத்தை வெளியிடு கின்றவர்கள், “நாணயமாக மக்கள் நடந்து கொள்ள வேண்டும்'' என்பதற்காக நாணயத்தை வெளியிட்டிருக்கின்றார்கள். அந்த நாணயத்தை வெளியிட்டது மாத்திரமல்ல – நாடு முழுவதும் அன்னை தெரசாவினுடைய விழாவைக் கொண்டாடியிருக்க வேண்டும்.




இந்த அரசைப் பொறுத்தவரையில், அண்மையிலே மகளிருக்காகக் கட்டப்பட்ட ஒரு பெரிய கட்டடத்திற்கு, “அன்னை தெரசா மகளிர் வணிக வளாகம்'' என்று நான் பெயர் சூட்டியதை நீங்களெல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள். அதைப்போலவே, இன்றைக்கு இந்த விழாவை எடுத்திருக்கின்றோம். அன்னை தெரசாவைப் பற்றி நான் முதலிலே சொன்ன இந்தப் பாராட்டுக்கள் மாத்திரமல்ல – அவரது பெயர் நிலைப்பதற்காக, என்றென்றும் தமிழ்நாட்டு மக்களுடைய நெஞ்சில் நிழலாட வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே அன்னை தெரசாவினுடைய நூற்றாண்டு விழாவிற்கு முன்பே – அவர் இங்கே வந்து நம்மையெல்லாம் பார்த்து, நமக்கெல்லாம் ஆசி வழங்கி, வாழ்த்துச் சொல்லி விடைபெற்றுச் சென்றாரே, அதற்கு முன்பே அன்னை தெரசாவினுடைய பெயரால்; ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டத்திற்கு “அன்னை தெரசா”வினுடைய பெயர் சூட்டப்பட்டு; ஆதரவற்ற மகளிர் திருமணத்திற்காக 25 ஆயிரம் ரூபாய் இந்த அரசின் சார்பாக நிதியாக வழங்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நினைவு திருமணங்களிலே கூட, அன்னை தெரசாவை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய அந்த எண்ணம் நமக்கு ஏன் ஏற்பட்டது? அவருடைய தொண்டும், அவருடைய சேவையும், அந்தத் தாயினுடைய முக மலர்ச்சியும், முதுமையிலும் தனது உடலைப் பற்றிக் கவலைப்படாமல், உள்ளத்திலே ஏற்பட்டிருக்கின்ற உணர்வுகளுக்கு மதிப்பளிக்க – உலகமெல்லாம் அலைந்து திரிந்து, நோயுற்றவர்களை, தொழுநோய் பிடித்தவர்களைக்கூட அரவணைத்து, அணைத்து, மகிழ்ந்து, அவர்களுடைய நோயைத் தீர்க்கின்ற வகையிலே அவர்களுக்குப் பக்கத்திலே இருந்து சேவை செய்த அம்மையார் அன்னை தெரசா அவர்களாவார்.

அவரைப் பற்றி மேற்கு வங்க மாநில முதல்வராக மட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டத் தளபதிகளில் ஒருவராகவும் விளங்கி இந்திய நாடு முழுமையும் புகழோடு திகழ்ந்த டாக்டர் ராய் அவர்கள், தமது 80–வது பிறந்த நாள் செய்தியில் அன்னை தெரசாவைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்:

“இந்த என் பிறந்த நாளில் – இந்த முதிய வயதில்– முதன்முதலில் யாரைப்பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ, அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தியடிகளின் நினைவுகூட எனக்கு வரவில்லை; என் உயிருக்குயிரான உற்ற தோழர் – இந்திய நாட்டின் தலைமை அமைச்சர் –ஜவகர்லால் நேரு பற்றிய எண்ணமும் என் நெஞ்சில் எழவில்லை; ஏன் எனக்கு மிகவும் நெருக்கமான என் உற்றார், உறவினர் எவரைப் பற்றிய சிந்தனையுமே எனக்கு வரவில்லை. ஆனால், எனது அலுவலகத்துக்குச் செல்லும் அந்த மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது, ஒரே ஓர் எளிய உருவம் மட்டுமே என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. திக்கற்ற ஏழைகளையும், நோயாளிகளையும், குழந்தைகளையும், காப்பாற்றுவதற்காக அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக, தம் வாழ்வையே ஒப்படைத்துக் கொண்டு அல்லும்பகலும் அயராது உழைக்கிறாரே, அந்த அன்னை தெரசாவின் மெலிந்த வடிவமே, என் இதயம், மூளை எல்லாவற்றையுமே சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது” என்று ராய் அவர்கள் தன்னுடைய பிறந்த நாள் செய்தியிலே அன்றைக்குக் கூறினார்கள். எங்கே அப்படிக் கூறினார்? வங்கத்தில் – அந்த வங்கத்திலே இந்த விழாவைக் கொண்டாடவில்லையே என்று யாரும் வருத்தப்படத் தேவையில்லை. வங்கமும் இந்தியாவிலே ஒரு பகுதிதான். எனவே, தமிழகத்திலே நாம் கொண்டாடினால் என்ன? வங்கம் கொண்டாடினால் என்ன? நாம் இங்கே கொண்டாடுவதும், வங்கம் கொண்டாடுவதைப் போலத்தான். ஆனால், வங்க தேசத்தை, வங்காள மாநிலத்தைக் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. ஒரு மாநில அரசு, இன்னொரு மாநில அரசைப் பற்றிச் சொல்லும்போது, நாகரிகமாக, பண்போடு, மாண்பு கெடாமல் செய்தி எதையும் சொல்ல வேண்டும். ஆனால், கொண்டாடாவிட்டாலும்கூட, அன்னை தெரசாவினுடைய கொள்கைகளைப் பின்பற்றுகின்ற மாநிலமாக இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களும் திகழ வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அன்னை தெரசாவினுடைய கொள்கை என்ன? ஏழையெளியவர்களை, பாட்டாளிகளை, நிர்க்கதியாக நிற்பவர்களை, மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டுமென்பது அன்னை தெரசாவினுடைய கொள்கை. அந்தக் கொள்கையின்படி, நாம் நடந்து கொள்கின்ற காரணத்தால்தான், அன்னை

**முதுமையிலும் தனது உடலைப் பற்றிக் கவலைப்படாமல், உள்ளத்திலே ஏற்பட்டிருக்கின்ற உணர்வுகளுக்கு மதிப்பளிக்க – உலகமெல்லாம் அலைந்து திரிந்து, நோயுற்றவர்களை, தொழுநோய் பிடித்தவர்களைக்கூட அரவணைத்து, அணைத்து, மகிழ்ந்து, அவர்களுடைய நோயைத் தீர்க்கின்ற வகையிலே அவர்களுக்குப் பக்கத்திலே இருந்து சேவை செய்த அம்மையார் அன்னை தெரசா அவர்களாவார்.**

தெரசாவினுடைய விழாவை எடுக்கின்ற யோக்கியதை நமக்கிருப்பதாக – தகுதி நமக்கு இருப்பதாக நாமே எண்ணிக் கொள்கின்றோம். நாம் இங்கே மனிதர்களை மனிதர்களாக எண்ணுகின்றோம் – அதனால்தான் அன்னை தெரசாவினுடைய விழாவை எடுக்கின்ற தகுதி நமக்கு இருப்பதாகச் சொல்கிறோம். வங்கத்திலே அந்த அம்மையார் பிறந்து, அவர் அந்தப் பகுதியிலே உலவி, அங்குள்ளவர்களுக்காகப் பாடுபட்டு, பணியாற்றி, சிறந்த தேச சேவகி, சமூக சேவகி என்ற அந்தப் பெயரைப் பெற்ற அந்த வங்கத்தில் – மேற்கு வங்கத்தில் – இன்னமும் மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கைரிக்ஷா இருக்கிறது. இங்கே அம்மையாருடைய விழாவைக் கொண்டாடுகிறோம் என்றால், கைரிக்ஷாவை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா கொடுத்துவிட்டு, மனிதனை வைத்து மனிதன் இழுப்பதா என்று மகாத்மா கேட்ட கேள்விக்கு பதிலளித்துவிட்டு, அந்தத் தகுதியோடு நாம் அன்னை தெரசாவினுடைய விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் கொண்டாடாததற்குக் காரணம், ஒருவேளை – நம் அளவிற்குக்கூட மனிதர்களை மதிக்கின்ற சுபாவம் ஒருசில மாநிலங்களுக்கு வராமல் இருக்கலாம் – அதனால் கொண்டாடாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்திலே இந்தப் பூபாகம் முழுதும் கொண்டாடுகின்ற – நான் இந்த வார்த்தையைப் பயன்படுத்தவே விரும்புகிறேன் – “மனித தெய்வமாக விளங்கக்கூடியவர் “மதர் தெரசா” – “மதர் தெரசா” என்பதை எடுத்துச்சொல்லி, “வாழ்க அந்த அன்னையாருடைய புகழ்” என்று கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# கடந்த நான்கரை ஆண்டு காலமாக பொது அமைதியைப் பேணி பாதுகாத்துவரும் காவல்துறைக்குப் பாராட்டு!

21.12.2010 அன்று, சென்னையில் நடைபெற்ற 561 காவல் பணியாளர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

சட்டத்தின் ஆட்சி என்பதும், சட்டத்தின் முன் எல்லோரும் சமமாக நடத்தப்படுவது என்பதும் ஒரு ஜனநாயக நாட்டின் அடித்தளமாகும். ஒரு நாட்டில் நிலவி வரும், பொது அமைதியும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பும், தனிமனிதப் பாதுகாப்பும், அந்நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும், அவ்வளர்ச்சியின் பயன்கள் மக்களைச் சென்றடையவும் காரணமாக உள்ளது. இதை உணர்ந்த இவ்வரசு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு முக்கியத்துவம் அளித்து, தமிழகக் காவல்துறையை மிகவும் நவீனமயமாக்கி அதன் செயல்திறனை அதிகப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.




தமிழகக் காவல் துறை தனது சீரிய செயல்பாட்டினால், பிரச்சினைகளை முன்கூட்டியே அறிந்து தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, மனித நேயத்தோடு மக்கள் பிரச்சினைகளைப் பாரபட்சமின்றி அணுகி, கடந்த நான்கரை ஆண்டுக் காலமாக இந்த மாநிலத்தில் சாதி, சமய மற்றும் அரசியல் பூசல்கள் எதுவும் இல்லாமல் பொது அமைதியைப் பேணிப் பாதுகாத்து வருகிறது.

இதன் காரணமாக வெளிநாட்டு அன்னிய முதலீடுகள், தொழில் முதலீட்டாளர்கள், பன்னாட்டு தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு மாநிலத்தில் முதலீடு செய்ய முன்வருவதால், தமிழகம் பொருளாதாரத்தில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு முன்னேற்றம் கண்டு வருகிறது.

பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப காவல் துறையினரின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டுமென்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, காவல்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை காவல் துறை இயக்குனரே நிரப்பிக் கொள்ளும் விதத்தில் ஆணையிட்டு, தற்போது காவல் துறையில் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட வழிவகுத்துள்ளது.




நிலையங்களிலேயே வழங்கப்பட்டு வந்ததற்கு மாறாக, காவலர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 50 சதவீத விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் முறை 1.10.2008 முதல் இந்த அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அரசு ஊழியர்களுக் கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் காவல் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 4 ஆண்டுத் தொகுப்பில் 2 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ செலவுத் தொகை பெற்றுக் கொள்ள அனுமதிக் கப்படுகிறது.

2006இல் இந்த அரசு பதவி யேற்றவுடன், காவல் துறையினர் ஓய்வு பெறுவதற்குள் தங்களுக் குரிய பதவி உயர்வினைப் பெற்றிடும் வகையில், இதுவரை இருந்து வந்த வயது வரம்பை நீக்கி, ஓய்வுபெறும் நாள்வரை பதவி உயர்வு பெறும் வகையில் ஆணை பிறப்பித்து, அனைவரும் பதவி உயர்வுபெற இந்த அரசு வழிவகை செய்துள்ளது.

தலைமைக் காவலர்களுக்குப் பதவி உயர்வில் இருந்து வந்த சிரமங்களைப் போக்கும் வகையில், உதவி ஆய்வாளர் பதவி உயர்விற்கு நடைமுறையில் இருந்து வந்த தேர்வு முறையை ரத்து செய்து, பணி மூப்பு அடிப்படையில் உதவி ஆய்வாளர்களை நியமிக்க ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2006ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், 15 ஆயிரத்து 84 காவலர்கள், 950 உதவி ஆய்வாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 1095 உதவி ஆய்வாளர்கள், 8 ஆயிரத்து 944 காவலர்கள், 486 சிறைக் காவலர்கள், 630 தீயணைப்பு வீரர்கள் என மொத்தம் 11 ஆயிரத்து 155 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு விரைவில் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன.

இத்துடன், உள்நாட்டுப் பாதுகாப்பில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில், மாநில நுண்ணறிவுத் துறையில், காவல் துறை தலைவர் தகுதியில் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவுக்கென தனியே ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டு, நுண்ணறிவுப் பிரிவில் 600 புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு அப்பிரிவு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கூலிப் படைகளின் நடவடிக்கைகள், ஆட்கடத்தல், ஹவாலா பணப் பரிவர்த்தனை, போதைப்பொருள் கடத்துதல் போன்ற குற்றங்களைச் செய்யும் குழுக்களின் செயல்பாடுகளைக் கண்டறிந்து, நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தனியாக "திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு" (Organised Crime Intelligence Unit) ஒன்று அமைக்கப்பட்டு, அதுவும் செயல்பட்டு வருகிறது.

**குற்ற நிகழ்வுகள் குறைந்த வருகின்றன**

காவல் பணியாளர்களுக்கு மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அந்தந்த காவல்

காவல்துறையில், அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டட வசதியில் இருந்த வந்த குறைகளைப் போக்கும் விதத்தில் தமிழக அரசு, கடந்த நான்கரையாண்டுகளில் 859 கோடியே 26 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 59 அலுவலகக் கட்டடங்கள், 284 காவல் நிலையங்கள், 11 ஆயிரத்து 30 குடியிருப்புகள், 13 தங்குமிடங்கள் ஆகியவற்றைப் புதியதாகக் கட்டுவதற்கு அனுமதித்து, இதுவரை 52 அலுவலகக் கட்டடங்கள், 123 காவல் நிலையக் கட்டடங்கள், 8,254 குடியிருப்புகள், 6 தங்குமிடங்கள் ஆகியவற்றைக் கட்டி முடித்துள்ளது.

தமிழகக் காவல் துறையினர் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருகின்றார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கைதுசெய்து தண்டனைகள் பெற்றுத் தருவதிலும் சிறப்பாகச் செயல்படுகின்றார்கள். இதன் காரணமாக குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன. குற்ற வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தமிழகக் காவல் துறையினரின் பணிகள் பாராட்டுக்குரியவை.

குறிப்பாக உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், அசோக்நகரில் டாமின் நிறுவன முன்னாள் தலைவர் டாக்டர் சரவணன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்



கொலை செய்யப்பட்ட வழக்கு, எம்.ஜி.ஆர். அவர்களின் உறவினர் விஜயன் கொலை வழக்கு, திண்டுக்கல் மருத்துவர் பாஸ்கரன் கடத்தி கொலை செய்யப்பட்ட வழக்கு, சென்னை பெரம்பூர் ரியல் எஸ்டேட் அதிபர் சீனிவாசன் கடத்தப்பட்ட வழக்கு, அரியலூர் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரின் தம்பி மகன் தர்மதுரை என்ற மாணவன் கடத்தப்பட்ட சம்பவம், சென்னை போத்தீஸ் துணிக் கடை ஊழியர்களை வழிமறித்து, அவர்களிடம் ஏறத்தாழ 81 இலட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கு, சிறுவன் ஆதித்யா கொலை வழக்கு, மதுரை மாநகரில் மாணிக்கம் செட்டியார் கொலை வழக்கு, சேலம் மாவட்டம், வாசம்பாடி காப்பித் தோட்டத்தில் 20 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சந்தன மரக் கட்டைகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கு, சென்னை துரைப்பாக்கம் எச்.டி.எப்.சி. ஏ.டி.எம். இயந்திரத்தை உடைத்து 20 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் களவு போன வழக்கு, கோவையில் பள்ளிக் குழந்தைகளைக் கடத்திச் சென்று கொலை செய்த வழக்கு, சென்னை முகப்பேர் பள்ளி மாணவன் கீர்த்திவாசன் கடத்தப்பட்ட வழக்கு உட்பட பல்வேறு வழக்குகளில் குறுகிய காலத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கைது செய்து, தமிழக காவல் துறை சிறப்பாகச் செயல்பட்டு பொது மக்களின் பாராட்டுகளைக் குவித்து வருகிறது.

தமிழகக் காவல்துறையினர் ஆற்றிவரும் அரும்பணிகளை ஊக்குவித்திடும் நோக்கில், ஆண்டுதோறும் அண்ணா பதக்கம், இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் போன்ற பல்வேறு பதக்கங்களை வழங்கி, இந்த அரசு அவர்களைப் பாராட்டி வருகிறது. இதன் தொடர்ச்சியாக கொலை, ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றங்களாகிய கற்பழிப்பு, மானபங்கம், வரதட்சணையால் மரணம் போன்ற வன்செயல்களைத் தடுப்பதிலும், நடைபெற்ற வன்செயல் குற்றங்களைத் திறம்படப் புலனாய்வு செய்து, உண்மையான குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து, அவர்கள்மீது நடவடிக்கை தொடர நீதிமன்றத்தின் முன்நிறுத்தி, அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தருவதிலும் முனைப்போடும் சிறப்போடும் செயல்படும் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், புலனாய்வு அதிகாரிகள் உட்பட அனைவரையும் போற்றும் வகையில், ஆண்டுதோறும் அவர்களில் 50 பேரைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பொற்கிழிகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும் என்பதை இந்த நிகழ்ச்சியிலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பொற்கிழிகள் தமிழக அரசின் பதக்கம் என்கிற பெயரால் அவர்களுக்கு வழங்கப்படும்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற காவல் துறை வீராங்கனை – சீன நாட்டில் குவாங்ஷூ நகரில் 12.11.2010 முதல் 27.11.2010 வரை நடைபெற்ற 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், கபடிப் போட்டிப் பிரிவில் இந்தியக் கபடிக் குழு முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றது. அக்குழுவில் தமிழகத்தின் சார்பில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஐந்தாம் அணியில் தலைமைக் காவலராகப் பணிபுரியும் செல்வி எஸ். கவிதா பங்கேற்றுச் சிறப்பாக விளையாடியுள்ளார். அவரது திறனைப் பாராட்டி, அவருக்குத் தமிழக அரசின்



சார்பில், உங்கள் அனைவரின் முன்னிலையில் ஊக்கப் பரிசாக 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழகக் காவல் துறைக்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள வீராங்கனை செல்வி எஸ். கவிதா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன்.

★ ★ ★

# கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.543 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ள புதிய கட்டமைப்புகள்

கோவை காந்திபுரம் பாலம், செம்மொழிப் பூங்கா கட்டடங்கள் உள்ளிட்ட புதிய கட்டமைப்புகள் ரூ.543 கோடியில் நிறைவேற்றப்படவுள்ள இப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 12.12.2010 அன்று சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து காணொலி காட்சி மூலம் ஆற்றிய உரை.



இன்று கோவையில் நடைபெறவிருந்த விழாவிற்கு நான் வருவதாக இருந்து – திடீரென எனது உடல்நிலை ஒத்து வராத காரணத்தால் வர இயலாமைக்கு வருந்து கிறேன். என்னுடைய வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் நண்பர்களுக்கு நான் என்னுடைய வருத்தத்தை தெரிவித்து மன்னிப்பையும் கோருகிறேன்.

543 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை மாநகரத்தில் புதிய கட்டமைப்புகளை உருவாக்கிட நடைபெறும் அடிக்கல் நாட்டு விழாவில் மற்றும் திறப்பு விழாவில் பங்கு பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடை கிறேன். கோவை சிங்காநல்லூரில் தங்கி வாழ்ந்த அந்த நாள் தொட்டு என் சிந்தையில் என்றும் நிறைந்திருக்கும் இந்தக் கோவை மாநகர வளர்ச்சியில் நான் எப்பொழுதும் தனிக்கவனம் செலுத்தி வருகிறேன் என்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்.

கோவை மாநகரத்தின் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில் கடந்த காலங்களில் – வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவைக்குக் குடிநீர் வழங்கும் சிறுவாணித் திட்டம், கோவையில் மூன்றடுக்கு மேம்பாலம், கோவை கிராஸ்கட் சாலையில் மேம்பாலம், கோவை – சத்தியமங்கலம் காமராச நகர் சாலையில் பாலம், கோவை – சிறுவாணி சாலையில் பாலம், கோவை – திண்டுக்கல் சாலையில் பாலம், நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம், ஆத்துப் பாலம் பிரிட்ஜ் மற்றும் கோவை புறவழிச் சாலை, அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம், 29 ஏக்கர் பரப்பில், 250 கோடி ரூபாய்ச் செலவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, 1,469 கோடி ரூபாய்ச் செலவில் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், பில்லூர் அணையை ஆதாரமாகக் கொண்டு கோவை மாநகருக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – உட்பட பல்வேறு திட்டங்கள் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டுள்ளன.

2010 ஜூன் திங்களில் உலகமெங்கும் வாழும் தமிழர் களின் இதயங்களை ஈர்த்து எழுச்சியோடு நடைபெற்று வெற்றி குவித்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, கோவை மாநகரில் பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. அவற்றுடன், மேலும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட இன்றைய விழாவிலே அடிக்கல் நாட்டப்படுகிறது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவில் நான் உரையாற்றியபோது வெளியிடப்பட்ட அறிவிப்புகளிலே ஒன்று தான் காந்திபுரம் மேம்பாலம்; கோவை காந்திபுரம் பகுதியில் பேருந்து நிலையங்களும், பல்வேறு வணிக நிறுவனங்களும் அருகருகே அமைந்துள்ளதால், கோவை மாநகரிலேயே போக்குவரத்து நெரிசல் மிக மிகுதியான பகுதியாக அமைந்து காந்தி புரத்தில் நஞ்சப்பா சாலையில் தொடங்கி, கிராஸ் கட் சாலை சந்திப்பு, நூறடிச் சாலைச் சந்திப்பு ஆகியவற்றைக் கடந்து, சத்தியமங்கலம் நெடுஞ்சாலையில் செல்லக் கூடிய வகையில் ஒரு கிலோ மீட்டருக்கு மேலான நீளம் கொண்ட, 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேம்பாலம்.

செம்மொழி மாநாட்டு அறிவிப்புகளில் மற்றொன்று – கோவை மாநகரில் பழைய சிறைச்சாலை அமைந்துள்ள 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் செம்மொழிப் பூங்கா.



கோவையில் தற்போதுள்ள சிறைச்சாலையை வேறு இடத்தில் மாற்றுவதற்காக, கோவைக்கு அருகில் வெள்ளலூர் என்னுமிடத்தில், கோவை மாநகராட்சி 75 ஏக்கர் நிலத்தை வழங்கிட முன்வந்துள்ளது. அந்த இடத்திற்குத் தற்போதைய சிறைச்சாலையை மாற்றிய பிறகு 165 ஏக்கர் நிலம் முழுவதும் சர்வதேசத் தரத்திலே செம்மொழிப் பூங்கா அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளதால், முதற்கட்டமாக அங்கு தற்போது கட்டடங்கள் இல்லாத 45 ஏக்கர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப் படவுள்ள செம்மொழிப் பூங்கா.

பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு நீர் எடுத்துச் செல்லக்கூடிய 50 ஆண்டு களுக்குமுன் அமைக்கப்பட்ட காண்டூர்க் கால்வாய் பழுதடைந்து, முழு கொள்ளளவு நீரையும் கொண்டு செல்ல முடியாத நிலையில் சேதமடைந்துள்ளதால், அக்கால்வாயைச் சீரமைத்திட வேண்டுமென நீண்ட காலமாகக்கோரி வரும் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 185 கோடி ரூபாய்ச் செலவில் காண்டூர்க் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டம்.

கோவை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இம்மருத்துவக் கல்லூரிக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் என உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக அறிவிக்கப்பட்டிருந்தபடி, ஏற்கெனவே 1,000 படுக்கைகள் கொண்ட கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேலும் 1,000 படுக்கைகள் இடம் பெறும் வகையிலும், 250 மருத்துவ மாணவ மாணவியர் தங்கும் விடுதி வசதியுடனும் கட்டப்படவுள்ள கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடங்கள்.

கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் உள்ளிட்ட 9 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 181 பொறியியல் கல்லூரிகளை இணைப்புக் கல்லூரிகளாகக் கொண்டுள்ள அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு கோவை மாவட்டம் சோமையம் பாளையத்தில் 131 ஏக்கர் நிலத்தில் 44 ஆயிரத்து 600 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட ஏறத்தாழ 67 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்; தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே உள்ள ஆவின் நிறுவனங்களில் கடந்த சில ஆண்டுகளாக அதிக அளவில் லாபம் ஈட்டும் சிறந்த நிறுவனமாக விளங்கும் கோவை ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதல் திறனை நாள்தோறும் இரண்டரை இலட்சம் லிட்டர் என்பதிலிருந்து, 5 இலட்சம் லிட்டர் என உயர்த்திடும் நோக்கிலும்; மற்ற பால் பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்திடும் நோக்கத்துடனும் ஏறத்தாழ 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை ஆவின் நிறுவனத்தை நவீனமயமாக்கும் திட்டம்.

கோவை மாவட்டத்தில் உள்ள ஜவுளி ஆலைத் தொழில்களுக்கு உதவும் வகையில் குறுகிய கால ஆடை வடிவமைப்புத் தொழில் சார்ந்த பல்வேறு பயிற்சிகள், பட்டமேற்படிப்பு பட்டயக் கல்வி, ஆயத்த ஆடை மற்றும் ஜவுளித் தொழில் தொடர்பான படிப்புகள் போன்றவற்றை வழங்கிடும் நோக்கத்தில், மத்திய ஜவுளித்துறை மூலம் ஆறரை ஏக்கர் நிலப்பரப்பில் தமிழக அரசின் நிதியுதவியோடு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் "தேசிய ஆடை வடிவமைப்பு பயிற்சி மையம்" ஆகிய 7 கட்டமைப்புகளுக்கு இன்றைய விழாவிலே அடிக்கல் நாட்டப்படுகிறது.

மேலும், மத்திய ஜவுளித்துறை சார்பில் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை மாநகரத்தில் கட்டப்பட்டுள்ள, சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச ஜவுளித் துறை மேலாண்மைக் கல்வி நிறுவனக் கட்டடமும், கலையரங்கமும் இன்றைய விழாவில் திறந்து வைக்கப்படுகின்றன.

இப்படி, ஏறத்தாழ 543 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை மாநகருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்த அரசு திட்டமிட்டுள்ள புதிய கட்டமைப்புகள் அனைத்தையும், குறித்த நேரத்திற்குள் கட்டி முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதோடு, இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களையும் மற்றவர்களையும் பாராட்டுவதுடன் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

## தமிழக அரசின் தொடர் முயற்சியால்

# அகல ரயில் பாதைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன

நாகப்பட்டினம் – வேளாங்கண்ணி புதிய அகல ரயில் பாதையை காணொலிக் காட்சி வாயிலாக 20.12.2010 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

**நா**கப்பட்டினம் – வேளாங்கண்ணி இடையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அகல இரயில் பாதையையும், இரயில் போக்குவரத்தினையும் காணொலிக் காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1935–ஆம் ஆண்டுக்கு முன்பாகவே திருச்சி நாகூர் இடையே, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் வழியாக, ஏறத்தாழ 135 கிலோ மீட்டர் நீளமுள்ள ஓர் அகல இரயில்பாதை இருந்தது. எனினும், அருகிலுள்ள இருப்புப்பாதைகள் அகல இரயில்பாதைகளாக அல்லாமல் மீட்டர் கேஜ் பாதைகளாக இருந்ததால் இரண்டாம் உலகப் போரின்போது, அந்த இருப்புப்பாதையும் மீட்டர் கேஜ் இருப்புப் பாதையாக மாற்றி அமைக்கப்பட்டது.

அந்த இருப்புப்பாதை அமைந்துள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி ஆகிய இரண்டு இரயில் நிலையங்களும் இந்து, முஸ்லிம், கிறித்துவ மதங்களைச் சார்ந்த மக்கள் பலர் அடிக்கடி வந்து செல்லக்கூடிய முக்கிய இரயில் நிலையங்களாகத் திகழ்கின்றன.

நாடு முழுவதிலுமுள்ள இருப்புப்பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக அமைக்கப்பட வேண்டும் என்னும் மத்திய அரசின் கொள்கையின்படி, தமிழக அரசு மேற்கொண்ட தொடர்முயற்சிகள் காரணமாக 2006க்குப்பின், விருதுநகர்– இராஜபாளையம்–தென்காசி; விருத்தாச்சலம்– வடலூர்– கடலூர்; விழுப்புரம் – பாண்டிச்சேரி; மதுரை– மானாமதுரை; தஞ்சாவூர் – கும்பகோணம் – மயிலாடுதுறை – விழுப்புரம்; திருச்சிராப்பள்ளி– புதுக்கோட்டை ஆகிய மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அகல இரயில் பாதைகளாக மாற்றப்பட்டு இரயில் போக்குவரத்துகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, நாகப்பட்டினம் வழியாக திருச்சியில் இருந்து நாகூர் வரை செல்லும் இருப்புப்பாதையும் ஏற்கெனவே அகல இரயில்பாதையாக மாற்றப்பட்டுள்ளது.




இம்மார்க்கத்தில் காரைக்கால், வேளாங்கண்ணி ஆகிய நகரங்களுக்கு வந்துபோகும் பயணிகளுக்கு தற்போது நாகப்பட்டினம், நாகூர் ஆகிய இரயில் நிலையங்கள் பெரிதும் உதவியாக அமைந்திருக்கின்றன. எனினும், வளர்ந்துவரும் இந்நகரங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, நாகப்பட்டினம் முதல் வேளாங்கண்ணி வரை 10 கிலோ மீட்டர் நீளமும், நாகப்பட்டினம் முதல் காரைக்கால் வரை 10 கிலோ மீட்டர் நீளமும் இரண்டு புதிய அகல இரயில் பாதைகளை அமைத்திட 2002ஆம் ஆண்டிலேயே மத்திய அரசு அனுமதி வழங்கியது.

ஆயினும், இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகளில் நிலவிய மந்த நிலையை 2006 மே திங்களில் அமைந்த இந்த அரசு அகற்றி, விரைவுபடுத்தியதன் காரணமாக, இந்தப் புதிய இரயில் பாதை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகள் நிறைவடைந்து, 2008ஆம் ஆண்டில் இந்த இருப்புப்பாதை அமைக்கும் பணி தொடங்கியது. அப்பணிகள் முழுவதும் நிறைவேற்றப்பட்டு முடிவடைந்துள்ள நிலையில் இன்று இரயில் போக்குவரத்திற்குத் திறந்து விடப்படுகிறது.

மொத்தம் 58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த வேளாங்கண்ணி மாதா கோயில் நிருவாகம், இத்திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வேளாங்கண்ணி பகுதி, அங்கு அமைந்துள்ள வேளாங்கண்ணி மாதா கோவில் காரணமாக முக்கியத்துவம் பெற்றுள்ளதால், அதனைப் புலப்படுத்தும் வகையில் வேளாங்கண்ணி இரயில் நிலையத்தின் கட்டட அமைப்பு, அக்கோவில் கட்டடக் கலை அமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளது.

**நாகூர் – காரைக்கால் புதிய ரயில்பாதை**

இத்திட்டத்தைத் தொடர்ந்து, நாகூர் காரைக்கால் புதிய இருப்புப்பாதைத் திட்டமும் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிக விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அத்திட்டப் பணிகள் இரண்டொரு மாதங்களில் முடிவடையவுள்ளன. எனினும், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, நாகூரிலிருந்து–காரைக்கால் துறைமுகம் வரையுள்ள ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவான பகுதியில் அகல இரயில் பாதை அமைக்கப்பட்டு 27.01.2010 அன்று போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதன்மூலம், காரைக்கால் துறைமுகத்தில் இருந்து, நாடு முழுவதற்கும் சரக்குகளைக் கொண்டு செல்லும் வசதி ஏற்பட்டுள்ளது.

**திருக்குவளை வழியாக புதிய ரயில்பாதை**

மேலும் தமிழக அரசு மத்திய அரசுக்கு அளித்த கோரிக்கையின் அடிப்படையில், திருக்குவளை வழியாக நாகப்பட்டினம் முதல் திருத்துறைப்பூண்டி வரை 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய அகல இரயில் பாதை அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இரயில்வே துறை இணை அமைச்சர் 25.01.2010 அன்று தமிழக அரசுக்குக் கடிதம் எழுதினார்.

அதனைத் தொடர்ந்து, இப்பாதை அமைப்பதற்கான நில எடுப்பு, நில மாற்றம் செய்தல் போன்ற பணிகளுக்குத் தமிழக அரசு ஆணைகளை வழங்கி, விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வேளாங்கண்ணி, நாகூர் தர்கா ஆகிய இடங்களுக்கு நாடு முழுவதிலும் இருந்து மக்கள் வந்து செல்கின்றார்கள். நீடாமங்கலம், திருவாரூர் ஆகிய நகரங்கள் நெல்வர்த்தகத்தின் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.

நாகூரில் சென்னை பெட்ரோ கெமிக்கல் நிறுவனத்தின் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றும் அமைந்துள்ளது. எனவே திருவாரூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, நாகூர், காரைக்கால் ஆகிய பகுதிகள் அகல இரயில்பாதை வசதிகளுடன் இணைக்கப்படுவது பயணிகள் போக்குவரத்திற்கும், சரக்குகள் போக்குவரத்திற்கும் பெரிதும் உறுதுணையாக அமையும்.

இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும், சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் மிகவும் உதவிகரமாக விளங்கும் எனக்கூறி இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் துணைபுரிந்த அனைவர்க்கும் தமிழக அரசின் சார்பில் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்புவாய்ந்த விழாவில் – ஏற்கெனவே மத்திய இரயில்வே நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு இன்னும் தொடங்கப்படாமல் உள்ள சில திட்டங்களை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

அதாவது, அத்திப்பட்டு–புத்தூர், ஈரோடு–பழனி, மாமல்லபுரம் வழியாக சென்னை–கடலூர்–ஆகிய புதிய இரயில்பாதைத் திட்டங்களை, மதுரை–போடிநாயக்கனூர் மீட்டர்கேஜ் பாதையை அகல இரயில்பாதையாக மாற்றும் திட்டம், சென்னை–கடற்கரை கொருக்குப்பேட்டை இடையில் மூன்றாவது இரயில் பாதை அமைக்கும் திட்டம், சென்னைக் கடற்கரை – அத்திப்பட்டு இடையில் நான்காவது இரயில்பாதை அமைக்கும் திட்டம், திருவள்ளூர் – அரக்கோணம் இடையில் நான்காவது இரயில்பாதை அமைக்கும் திட்டம் ஆகியவற்றுடன், விழுப்புரம்–திண்டுக்கல் இடையில் இரட்டை ரயில் பாதைகள் மற்றும் மின்மயமாக்குதல் திட்டம் ஆகிய திட்டங்கள் இரயில்வே பட்ஜெட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும்கூட, இதுவரை எதிர்பார்ப்பிற்கு ஏற்ப தொடங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பணிகள் தொடங்கப்பட்டுள்ள திட்டங்களில், திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை, திண்டிவனம்–நகரி ஆகிய புதிய இரயில்பாதைகள்; மானாமதுரை–விருதுநகர், திண்டுக்கல்–பொள்ளாச்சி–காரைக்குடி–திருத்துறைப்பூண்டி ஆகிய மீட்டர் கேஜ் பாதைகளை அகல இரயில்பாதைகளாக ஆக்கும் திட்டம் செங்கல்பட்டு–விழுப்புரம் இடையே இரட்டை இரயில் பாதைகள் அமைக்கும் திட்டம் ஆகிய திட்டங்கள் மிகவும் மந்தகதியில் செயல்பட்டு வருகின்றன என்பதனைச் சுட்டிக்காட்டிட கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்திட்டங்களுக்கெல்லாம் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்து இவற்றை விரைவாகச் செயல்படுத்திட மத்திய பேரரசு ஆவனசெய்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள நாகப்பட்டினம் வேளாங்கண்ணி புதிய அகல இரயில் பாதைத் திட்டம் வெற்றி பெற மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# தமிழகத்தில் பலத்த மழை காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் உடனடியாக வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையின் அவசரக் கூட்டம் (7.12.2010)



தமிழகத்தில் பலத்த மழை பெய்த காரணத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாணம் கிடைத்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரசு உயரதிகாரிகளை நேரில் அனுப்பி புள்ளி விவரங் களைச் சேகரித்து அவர்களின் அறிக்கையைப் பெற்றார். அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவது குறித்தும், வெள்ளச் சேதங்களை சீரமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 7.12.2010 அன்று மாலை அமைச்சரவையின் அவசரக் கூட்டம் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

வெள்ளத்தால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இரங்கலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதலும் அமைச்சரவைக் கூட்டத்தில் முதலில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், ஒன்பது மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்த்து திரும்பிய எட்டு மூத்த

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் அறிக்கைகளை நீண்ட நேரம் விவாதித்து, எடுத்த முடிவுகள் பின் வருமாறு :–

வெள்ளத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு, பாதிக்கப்பட்ட குடிசை மற்றும் குடிசை அல்லாத வீடுகள் மற்றும் பயிர்ச் சேதம் ஆகியவற்றுக்கு நிவாரணம் வழங்கிடவும், சாலைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைத் தற்காலிகமாக சீரமைப்பு செய்யவும் உத்தேசமாகத் தேவைப் படும் ரூபாய் 500 கோடி நிதியை ஒதுக்க இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

பயிரிழப்புக்கும், சாலைகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிரந்தர மாகச் சீரமைக்கவும் தேவையான ரூபாய் 1,607 கோடியை, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மத்திய அரசிடமிருந்து கோரிப் பெற முடிவு செய்யப்பட்டது.

மழை, வெள்ளத்தால் இதுவரை 203 நபர்கள் இறந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணமாக தலா ரூபாய் 2 இலட்சம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மழை வெள்ளத்தால் இது வரை 5,068 கால்நடைகள் இறந்துள்ளன. கறவை மாடு, உழவு மாடு போன்றவை இறந்திருந்தால் அவைகளுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதமும், கன்றுக்குட்டிகளுக்கு ஐயாயிரம் ரூபாய் வீதமும், ஆடுகளுக்கு ஆயிரம் ரூபாய் வீதமும், கோழிகளுக்கு முப்பது ரூபாய் வீதமும் நிவாரணம் உடனடியாக வழங்கப்படும்.

இதுவரை 8,000 குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 40,000 குடிசைகள் பகுதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. பல கிராமங்களில் மழைநீர் வடியாமல் உள்ள நிலையில், குடிசைகளின் பாதிப்பு எண்ணிக்கை கணிசமாக உயரும் என்றும், இவை ஒரிரு நாட்களில் முடிவு செய்யப்பட்டு, முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 5,000 வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 2,500 வீதமும் நிவாரணமாக ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும்.

மேலும் மூன்று இலட்சத்து இருபதாயிரம் குடிசைகள் அல்லாத பிற வீடுகளும் வெள்ள நீர் பெருகிய காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கான நிவாரணமாக வீடு ஒவ்வொன்றுக்கும் தலா ரூபாய் 1,500 வீதம் உடனடியாக வழங்கப்படும்.

**மீனவர்களுக்கு நிவாரண உதவி!**

மீனவர்கள் படகு, கட்டுமரம், வலை ஆகியவை இந்தப் பெருமழை காரணமாக முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தால் புதிதாக வாங்குவதற்கு 7,500 ரூபாய் வீதமும், ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தால் அவைகளை பழுதுபார்ப்பதற்கு 2,500 ரூபாய் வீதமும் நிவாரண உதவியாக வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், தொற்றுநோய் பரவாமல் தடுக்க போர்க்கால அடிப்படையில் சுகாதாரப் பணிகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் மேற்கொள்ளும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சிறப்பு ஆணையர்களின் அறிக்கையின்படி, சுமார் 15 இலட்சம் ஏக்கர் பயிர் நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிந்தவுடன், பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் முழுமையாகக் கணக்கிடப்பட்டு, 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் 8,000 வீதமும், நெல் தவிர மற்ற பயிர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவிலும் நிவாரணம் வழங்கப்படும். மேலும் மறுசாகுபடிக்குத் தேவையான விதை, உரம் போன்ற இடுபொருட்களைப் போதிய அளவு இருப்பு வைத்து வழங்கவும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைத்துறை மேற்கொள்ளும்.

நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், வெள்ள பாதிப்பினை மதிப்பீடு செய்யவும் ஒன்பது மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆணையர்களே தொடர்ந்து நடைபெற்றுவரும் வெள்ள நிவாரணப் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு கண்காணிப்பர்.

**ஆற்றுப் படுகைகளில்**
**வடிகால் வசதிக்கு மாபெரும் திட்டம்!**

இதுதவிர, ஆய்வு செய்த சிறப்பு ஆணையர்களின் அறிக்கையின்படி, கடலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பெருத்த பாதிப்பிற்கு வடிகால் வசதி முறையாக இல்லாதது தான் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், கடலூரில் வெள்ளாறு, பரவனாறு, உப்பாறு ஆகிய ஆற்றுப் படுகைகளில் வடிகால் வசதி ஏற்படுத்துவதற்கான திட்டமும், காவிரி டெல்டா பகுதிகளில் கொள்ளிடம், அரிச்சந்திரா நதி, வெண்ணாறு, பாமிணியாறு, கோரையாறு, வளவனாறு, வெட்டாறு போன்ற டெல்டா பகுதிகளில் உள்ள ஆற்றுப் படுகைகளில் வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், நீண்டகால வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் திட்டங்களைத் தீட்டி, வருங்காலத்தில் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

★ ★ ★

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட வருகை தந்த மத்தியக் குழுவினர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை

தமிழகத்தில் கடந்த வடகிழக்கு பருவமழையின் காரணமாக தமிழகத்தின் 23 மாவட்டங்களிலும் கடுமையான சேதமும், உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட மத்திய அரசின் சார்பில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் திரு.எல்.விசுவநாதன்,இ.ஆ.ப., தலைமையிலான குழுவினர் 16.12.2010 அன்று, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.



இக்கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இக்குழுவினரிடம் தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சற்று தாமதமாக 29.10.2010 அன்று தொடங்கியது. எனினும் கடந்த 4–5 மாதமாக தொடர்ந்து மழை பெய்து வந்துள்ளது. இப்பருவமழைக் காலத்தில் 06.12.2010 வரை சராசரியாக பெய்ய வேண்டிய மழை அளவு 420.2 மிமீ ஆகும். ஆனால் தற்போது 47% கூடுதலாக, அதாவது 615.9 மிமீ வரை மழை பெய்துள்ளது.

இப்பருவமழை தொடங்கிய காலத்தில் ஏற்பட்ட "ஜல்" புயல் மற்றும் கனமழையின் காரணமாக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களும் சேதத்திற்குள்ளா யின. மேலும், நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் வங்கக் கடலில் தொடர்ந்து ஏற்பட்ட எட்டு காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக, மாநிலத்தின் 23 மாவட்டங்களில் உயிர்ச்சேதம், கால்நடைகள் சேதம், குடிசைகள் சேதம் மற்றும் பயிர்கள் கடுமையாக சேதத்திற்குள்ளாயின.

இதுவரையில் 203 நபர்கள் இறந்துள்ளனர். இறந்தோரின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி யாக, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சமும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து ஒரு இலட்சமும், ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மழையினால் இறந்துள்ள 5,068 கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு உச்ச வரம்பினைத் தளர்த்தி , கறவை மற்றும் உழவு மாடுகளுக்கு தலா ரூ.10,000மும், கன்றுகளுக்கு தலா ரூ.5,000மும், ஆடுகளுக்கு தலா ரூ.1,000மும், கோழிகளுக்கு தலா முப்பது ரூபாயும் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாநிலத்தில் இதுவரை 8,702 குடிசைகள் முழுவதுமாகவும், 41,663 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளது. முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா 5,000 ரூபாயும், பகுதியாக

பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா 2,500 ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படுகிறது. மேலும், வெள்ள நீர் பெருகிய காரணத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகள் அல்லாத 3,20,000 வீடுகளுக்கு நிவாரணமாக தலா 1,500 ரூபாயும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

கனமழையின் காரணமாக, 5.04 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான நெல் உள்ளிட்ட அனைத்து பயிர்களும் சேதமடைந்துள்ளதாக அறிக்கை வரப் பெற்றுள்ளது. இவற்றில், 50 சதவீதத்திற்கு மேலாக பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு, ஒரு ஹெக்டேருக்கு ரூ. 8000/– வீதமும், பிற பயிர்களுக்கு அனு மதிக்கப்பட்ட அளவிலும், நிவாரணம் வழங்கிட உத்தரவிடப் பட்டுள்ளது. மீனவர்கள் படகு சேதமடைந்தால் ரூ.2,500 முதல் ரூபாய் 7,500 வரை நிவாரணம் வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 11,000 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை களும், 2,924 சிறு மற்றும் குறு பாலங்களும், பொதுப் பணித்துறை கட்டுப்பாட்டிலுள்ள ஆறு, ஏரி மற்றும் குளங்களின் கரைகளில் 4,559 இடங்களில் உடைப்பும் ஏற்பட்டுள்ளது. 2,240 பொதுக் கட்டடங்கள் மழை காரணமாக சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு உடனடி நிவாரண உதவித் தொகை மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளின் தற்காலிக சீரமைப்பிற்கு முதற்கட்டமாக, கடந்த 01.12.2010 அன்று 100 கோடி ரூபாயும், மேலும் கடந்த 08.12.2010 அன்று கூடுதலாக 100 கோடி ரூபாயினையும் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதற்கிடையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 08.12.2010 முதல் 10.12.2010 வரை பெய்த தொடர் கனமழை காரணமாக , மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டதோடு, பெருத்த பொருட்சேதமும் ஏற்பட்டது. ஏறத்தாழ 140 கோடி ரூபாய்க்கான சேத மதிப்பீட்டு அறிக்கையும் வரப்பெற்றுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை தற்காலிகமாக சீரமைத்திட கடந்த 07.12.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தின் முடிவில் கூடுதலாக 300 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

மேற்கண்ட சேதங்களை உடனடியாக சீரமைக்கும் பொருட்டு, 1,635 கோடி ரூபாய் நிவாரணம் கோரி, மத்திய அரசுக்கு 09.12.2010 அன்று கோரிக்கை மனுவும் தமிழக அரசின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் தெரிவித்ததோடு, பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாக பார்வையிட்டு தமிழக அரசின் சார்பில் கோரியுள்ள நிவாரணத் தொகையினை விரைந்து வழங்கிட ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, தமிழக அரசின் தலைமைச் செயலர் திருமதி. எஸ்.மாலதி, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் ந.சுந்தரதேவன்,இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலர் திரு.வி.கே.ஜெயக்கொடி,இ.ஆ.ப., உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து மத்திய குழுவினர் துறை வாரியான செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் விரிவான ஆலோசனையும் மேற்கொண்டார்கள். இக்கூட்டத்தில், துறைச் செயலர்கள் திரு.கே. அசோக்வர்தன்ஷெட்டி,இ.ஆ.ப., (நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்), திரு.கே.அலாவுதீன்,இ.ஆ.ப., (ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்) திரு.க.தனவேல், இ.ஆ.ப., (பொதுப்பணித் துறை), திருமதி. எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப.,( கால்நடை பராமரிப்பு), திரு.ஜி.சந்தானம், இ.ஆ.ப., (நெடுஞ்சாலைகள்), டாக்டர் பி.ராம் மோகன்ராவ், இ.ஆ.ப., (வேளாண்மை), மின்வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சி.பி.சிங்,இ.ஆ.ப., தோட்டக் கலைத் துறை ஆணையர் டாக்டர் பி.சந்திரமோகன்,இ.ஆ.ப.,ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.டி.உதயசந்திரன், இ.ஆ.ப., சுனாமி திட்ட இயக்குநர் திரு. ஏ.கார்த்திக்,இ.ஆ.ப., இணை ஆணையர் திரு.கே. நாகராஜன் (பேரிடர் மேலாண்மை) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

★ ★ ★

**தெரியுமா ?**

**பெருமழையால் படகு, கட்டுமரம், வலை ஆகியவை முழுதும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.7,500, ஓரளவு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.2,500 நிவாரண உதவியாக வழங்கப்படும் என அரசு அறிவிப்பு**

# பெரு மழையால் குடிசைகளை இழந்தோர்க்கு ரூ.5 ஆயிரமாகவும், நெற்பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.10 ஆயிரமாகவும் நிவாரண உதவி உயர்வு!

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!



**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வடகிழக்குப் பருவமழையினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து, புனித ஜார்ஜ் கோட்டையில் 30.11.2010 அன்று ஆய்வு செய்தார்.

பெருமழையினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதமும்; உயிரிழந்த கால்நடைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வரையிலும்; தேவையான இடங்களில் உணவு வழங்கியும் தொடர்ந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தண்ணீரில் மூழ்கியுள்ள பயிர்களை மதிப்பீடு செய்து, சேதம் குறித்த அறிக்கை அனுப்பும் பணியில் மாவட்ட ஆட்சியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். பாலங்கள், சாலைகள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள சேதங்களை தற்காலிகமாகச் சீரமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், குடிசைகளை இழந்தோருக்கு – முழுமையான அளவில் குடிசைகள் சேதம் அடைந்திருந்தால், ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 2 ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாயாகவும்; பகுதியாக குடிசைகள் சேதமடைந்திருந்தால், ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபாய் என்பதை 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தப் பெருமழையினால் ஏற்பட்டுள்ள பேரிடர் தொடர்பான நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.11.2010 அன்று அறிவித்துள்ளார்.

* * *

**த**மிழகத்தில் அண்மையில் பெய்த வடகிழக்குப் பருவமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு இழப்பீடாக எக்டேர் ஒன்றுக்கு ஏற்கெனவே 7 ஆயிரத்து 500 ரூபாய் நிவாரணத் தொகை என்றிருந்ததை 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8.12.2010 அன்று ஆணை பிறப்பித்திருந்தார்.

இந்த நிவாரணத் தொகையை மேலும் அதிகப்படுத்தி வழங்கிட வேண்டுமென விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, அக்கோரிக்கைகளை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து 50 சதவீதத்திற்கு மேல் பாதிப்படைந்துள்ள நெற்பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை 8 ஆயிரம் ரூபாய் என்பதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 20.12.2010 அன்று ஆணையிட்டுள்ளார். ★

# கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகள்

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

தமிழகத்தில் 2010 டிசம்பர் மாதம் பலத்த மழை பெய்தது. இதனால் ஏற்பட்ட சேத விவரங்களைப் புள்ளி விவரங்களுடன் சேகரித்திட அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிலையில், கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறிஞ்சிப்பாடி வட்டம், மறுவாய் கிராமத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 06.12.2010 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் பிறகு, குறிஞ்சிப்பாடியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், உயிரிழந்த 3 குடும்பங்களுக்கு தலா ரூ. 2 இலட்சம் வீதம் ரூ.6 இலட்சத்திற்கான காசோலையும், மழை வெள்ளத்தால் உயிரிழந்த 5 கால்நடைகளுக்கு ரூ.45,000 நிவாரண உதவிகளையும், முழுவதும் சேதமடைந்த 271 வீடுகளுக்கு தலா ரூ.5,000 வீதம் ரூபாய் பதிமூன்று இலட்சத்து 55 ஆயிரத்திற்கான காசோலையும், தலா 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை ஆக, 279 நபர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பிலான உதவிகளையும் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“தமிழகத்தில் கடந்த 10 நாட்களாக பெய்த கனமழையால் கடலோர மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் போன்ற மாவட்டங்களில் மழை வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் அமைச்சர்களும், மாவட்ட ஆட்சியர்களும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். தமிழக முதல்வர் அவர்கள் வெள்ளச் சேத விவரங்களைச் சேகரிக்க, அரசு உயர் அதிகாரிகளை அனுப்பி 2 நாட்களாக புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது”.

கடலூர் மாவட்டத்தில் பெய்த கனமழையால் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சியில் உள்ள சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் 1,000 கிலோ மீட்டர் சேதம் அடைந்துள்ளன. இதுவரை 90 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் நீரில் முழ்கியிருந்தன. மழையின் காரணமாக 10 நபர்களும், 120 கால்நடைகளும் உயிரிழந்துள்ளன.

இம்மாவட்டம் முழுவதும், 2,000 குடிசைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.



அதன்பிறகு குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., ஆகியோர் கடலூர் மாவட்டத்திற்கு நிரந்தர வெள்ளத் தடுப்பு திட்டம் குறித்து விளக்கினர். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர்.க.பொன்முடி, கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.அழகிரி, சிறப்பு அலுவலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ★

# நூல் ஏற்றுமதிக்கு ஏற்றுமதி வரி விதிக்க வேண்டும்!

மாண்புமிகு **இந்தியப் பிரதமர்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் எழுதிய கடிதம் (2.12.2010)

**நா**ன் கடந்த 23.9.2010 அன்று எழுதிய விரிவான கடிதத்திற்கு உங்களது கவனத்தை ஈர்க்கிறேன். அதில், ஏற்றுமதிக்கு அனுமதிக்கும் முன்பு உள்நாட்டுத் தேவைகளை முழுமையாகச் சந்திக்க பஞ்சு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்தி உள்ளேன். இருப்பினும், 55 இலட்சம் பேல் பஞ்சு ஏற்றுமதிக்கு, அதுவும் நவம்பர் முதல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. சந்தேகத்துக்கு இடமின்றி, இந்த முடிவு கடந்த இரண்டு மாதங்களாக பஞ்சு விலைகள் தொடர்ந்து உயர்ந்து வர வழி வகுத்துள்ளது.



2010 செப்டம்பர் கடைசி வாரம் முதல் 2010 நவம்பர் கடைசி வாரம் வரை பஞ்சு விலைகள் ஏறத்தாழ 20 சதவீதம் உயர்ந்துள்ளன.

**சீனாவை விட இருப்பு சதவிகிதம் இந்தியாவில் குறைவு!**

மேலும், பஞ்சு ஏற்றுமதியாளர்கள் பெருமளவு வாங்குவதால், உள்நாட்டுத் தேவைகளைச் சமாளிக்கத் தேவையான பஞ்சு சந்தைக்கு வருவது மிகவும் போதுமானதாக இல்லாமல் உள்ளது. சாதாரணமாக, சந்தைக்கு புதிய சரக்குகள் வருவதால் அக்டோபர் மாதத்திற்குப் பிறகு 4 – 5 மாதங்களில் பஞ்சு விலைகள் குறையும். இருப்பினும், இந்த ஆண்டு, 55 இலட்சம் பேல் பஞ்சு ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சு இருப்பை வைத்துக் கொள்ள சந்தையில் பஞ்சு முற்றிலுமாகக் கிடைக்கவில்லை.

நமது பஞ்சு ஏற்றுமதியால் ஆதாயமடையும் சீனா போன்ற நாடுகள், சுமார் 33 சதவீத விகிதங்களைப் பயன்படுத்த இருப்பைப் பராமரிக்கும் போது, இந்தியாவில் இருப்பு சுமார் 17 சதவீத விகிதத்தைப் பயன்படுத்த மட்டும் உள்ளது. விவசாயத்துக்கு அடுத்து அதிகபட்ச வேலைவாய்ப்பை வழங்கும் நமது ஜவுளித் துறைக்கு கச்சாப்பொருட்கள் தொடர்ந்து கிடைத்திடும் வகையில் ஜனவரி மாதம் வரை நீடிக்கக் கூடிய பருத்தி பறிக்கும் பருவமான இந்த நான்கு மாதங்களின் போது நமது பஞ்சு இருப்பை அதிகரித்துக் கொள்வது உடனடித் தேவையாகும்.

**பஞ்சு ஏற்றுமதி**

தமிழ்நாட்டில் மட்டும் கைத்தறியும், விசைத்தறியுமாகச் சேர்ந்து 50 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. நாடு முழுவதற்கும் இத்தொழில்களால் அளிக்கப்படும் வேலைவாய்ப்பு பன்மடங்கு அதிகமாக இருக்கும். எனவே, உள்நாட்டு ஜவுளித் தொழிலின் தேவைகளைச் சமாளிக்கவும், உள்நாட்டுச் சந்தைக்குப் போதுமான வரவுகள் பஞ்சு விலையில் கணிசமான குறைவைக்கொண்டு வரும் வகையிலும் பஞ்சு ஏற்றுமதிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஆணையிடும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சு விலைகளின் போக்கைத்தொடர்ந்து, பருத்தி நூல் விலைகளும் செங்குத்தாக உயர்ந்துள்ளன. மேலும், கணிசமான அளவு பருத்தி நூல் ஏற்றுமதிக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதால், நமது பின்னலாடை மற்றும் ஆடை நெசவுக்கு பருத்தி நூல் கிடைப்பது குறைந்துள்ளது.

நூலை வைத்து உற்பத்தி செய்யும் ஜவுளித் தொழிலில் விசைத்தறித் துணி, பின்னலாடை, கைத்தறித்துணி, ஆயத்த ஆடைகள் போன்றவற்றின் அதிக உற்பத்திக்கு உதவும் வகையில் மதிப்புக் கூட்டை சாத்தியமாக்க பருத்தி நூல் ஏற்றுமதிகளையும் மட்டுப்படுத்த தேவை உள்ளது.

**உள்நாட்டுத் தேவைகளைச் சமாளிக்க பிரதமரின் தலையீடு தேவை!**

கைத்தறிகள், விசைத்தறிகள் மற்றும் பின்னலாடை ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் நூல் வேறுவிதமானது; உள்நாட்டுத் தேவைகளைச் சமாளிக்க அவை பிரிவு வாரியாக போதுமான அளவு கிடைக்க வேண்டும். எனவே பருத்தி நூல் ஏற்றுமதிக்கு உச்சவரம்பு விதிக்கவும், விதித்ததும் பருத்தி நூலுக்கு ஏற்றுமதி வரிவிதிக்க வகை செய்யவும் வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது உள்நாட்டுத் தேவைகளை சந்திக்கும் வகையில் பஞ்சு, பருத்தி நூல் ஆகிய இரண்டு கச்சாப்பொருள்களும் எளிதாகக் கிடைக்கும் வகையில் இதில் தங்களது விரைவான தலையீட்டை எதிர்நோக்குகிறேன்.

★

# மண்ணில் மனிதம் காப்போம் மனித நேயம் வளர்ப்போம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் மனித உரிமை நாள் செய்தி

மனிதனை மனிதனாக மதித்திட வேண்டும் எனும் மனிதநேய உணர்வை வளர்த்திடும் நோக்கில் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 10ஆம் நாள், "உலக மனித உரிமை நாள்" எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

மனிதநேய உணர்வோடு 1973 ஆம் ஆண்டிலேயே, மனிதனை வைத்து மனிதனே இழுக்கும் கை ரிக்ஷாவை ஒழித்து, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திய இந்த அரசு தமிழகத்தில் மனித உரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நிகழக் கூடாது எனும் எண்ணத்துடன் 1997 இல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஒருவர் தலைமையில் "தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம்" எனும் புதிய அமைப்பை ஏற்படுத்தியது.

சமுதாயத்தில் ஆண்டாண்டு காலமாக சாதி,மத, இன பேதங்கள் கூறி நசுக்கப்பட்டுவரும் நலிந்த பிரிவினர், மலைவாழ் பழங்குடியினர், குழந்தைத் தொழிலாளர்களாக – கொத்தடிமைகளாகச் சுரண்டப் படுவோர், மகளிர், மாற்றுத் திறனாளிகள் போன்ற அனைவருக்கும் ஆதரவுக்கரம் கொடுத்து, அவர்களுக்குத் துணைபுரியும் அமைப்பாக இந்த மனித உரிமை ஆணையம் செயல்பட்டு வருகிறது.

இந்த ஆணையம், இந்திய அரசியல் சட்டமும் நீதிமன்றங்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் அளித்திடும் வாழும் உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, சுதந்திரம போன்றவைகளை நிலைநாட்டுவதற்காக அது தொடங்கப்பட்ட 1997ஆம் ஆண்டு முதல் இதுவரை வரப்பெற்ற 1 இலட்சத்து 3 ஆயிரத்து 199 விண்ணப்பங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு, 97 ஆயிரத்து 615 விண்ணப்பங்கள் மீது ஆணை பிறப்பித்து நலிந்தவர்களின் நலன்காக்கும் திருப்பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறது.



மனிதக் கழிவை மனிதனே தலையில் சுமந்த கொடுமையை ஒழித்து, அப்பணியில் ஈடுபட்டிருந்த அருந்ததியர் சமுதாயம் மற்ற சமுதாயங்களைப் போல முன்னேற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு 2008 இல் 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கி அவர்கள் உயர வழிவகுத்து தமிழகத்தில் மனித உரிமைகள் சிறந்திடத் தொடர்ந்து பாடுபட்டுவருகிறது இந்த அரசு, இத்தகைய சூழ்நிலையில் மனிதஉரிமை மீறல் நிகழ்வுகள் எங்கும் நடைபெறாமல் முற்றிலும் தடுக்கப்பட்டாக வேண்டும் எனும் உணர்வோடு ஒவ்வொருவரும் செயல்படுவோம், "மண்ணில் மனிதம் காப்போம் –மனிதநேயம் வளர்ப்போம்" என இந்நாளில் உறுதியேற்போமாக.

★ ★ ★

# பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்களுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை



அரசாணை நிலை எண். 215, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்2) துறை, நாள் 25.10.2010. வாயிலாக, பள்ளியிறுதித் தேர்வு, மேல்நிலைக்கல்வித் தேர்வு மற்றும் பட்டதாரி கல்வி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்றே, 2010–2011ஆம் நிதியாண்டில், அனைத்துப் பள்ளியிறுதித் தேர்வு தேர்ச்சி பெறாதவர்களுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராக இருத்தல் வேண்டும்.

1. பயன்தாரார் முறையாகப் பள்ளியில் 9ஆவது வகுப்பு தேர்ச்சி பெற்று, பின்னர் 10ஆவது பள்ளியிறுதித் தேர்வில் கலந்துகொண்டு தோல்வியடைந்தவர்களாக இருந்து, தமது கல்வித் தகுதியை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்பவராக இருத்தல் அவசியம்.
2. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளைப் பொறுத்தவரை 45 வயதைக் கடக்காதவராகவும், இதர வகை பயனாளிகளைப் பொறுத்தவரை 40 வயதைக் கடக்காதவராகவும் இருத்தல் அவசியம்.
3. பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000க்கு மிகாமல் இருத்தல் அவசியம்.
4. பயனாளி, அரசு நிறுவனங்களிலோ அல்லது எந்தவொரு தனியார் நிறுவனத்திலோ பணிபுரிபவராக இருத்தலாகாது. சுய தொழிலிலும் ஈடுபடலாகாது.
5. பயனாளி பள்ளி அல்லது கல்லூரியில் பயிலும் முழு நேர மாணாக்கராக இருத்தலாகாது.
6. பயனாளி குறைந்தபட்சம் 15 ஆண்டுகளாவது தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் அவசியம்.

- மேலே, தெரிவிக்கப்பட்ட இனம் 1 முதல் 6 வரை இடம் பெறும் முற்படு தகுதிகளை உறுதி செய்யும் வகையில் பயனாளி வருவாய்த் துறையிடமிருந்து, ஒரு ஒருங்கிணைந்த சான்றிதழை பெற்று, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற அனுமதிக்கப்படும் பொழுது அளித்தல் வேண்டும்.
- இந்த உதவித்தொகை அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியில் பயனாளி பராமரித்து வரும் சேமிப்புக் கணக்கு வாயிலாக ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் வழங்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு பிரதி மாதம் ரூ.100 வீதம், உதவித்தொகையாக 3 ஆண்டுகளுக்கு இதர நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ், தொடர்ந்து பயன்பெற பயனாளி, தான் அனுமதிக்கப்பட்ட பின்னர், ஒவ்வொரு ஆண்டு நிறைவு செய்யும் பொழுதும், அதாவது 2ஆவது மற்றும் 3ஆவது ஆண்டுகளின் துவக்கத்தில் தாம் எந்தவொரு வேலையிலும் இல்லை என்பதை உறுதி செய்யும் சுயஉறுதி ஆவணத்தை, தமக்கு உதவித்தொகை வழங்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அவசியம் சமர்ப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்பும் பள்ளியிறுதித் தேர்வு தேர்ச்சி பெறாத பதிவுதாரர்கள், தாம் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்துடன், அனைத்து சான்றிதழ்களுடன், தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# நீதித்துறைக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை செய்து பணிகளை விரைவுபடுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது!

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மதுரையில், 11.12.2010 அன்று நடைபெற்ற நீதித்துறை பயிற்சி மண்டல மையம் மற்றும் மாற்று தீர்வுமுறை மையம் அடிக்கல் நாட்டு விழா, உயர் நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்ற துவக்க விழாவில் ஆற்றிய உரை.

---

**பொ**ற்கை பாண்டியனும், நீதியை நிலைநாட்ட தன்னுயிர் துறந்த பாண்டியன் நெடுஞ்செழியனும் அரசாண்ட புகழுக்குரிய மதுரை மாநகரில் இன்றைய தினம், நடைபெறும் இந்த சிறப்பான விழாவில், நீதித்துறை பயிற்சி மண்டல மையம் மற்றும் மாற்று தீர்வுமுறை மையம் ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டு விழா, உயர் நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்ற துவக்க விழா ஆகியவை சிறப்பான முறையில், நடைபெற்று கொண்டுள்ளன.

மக்களாட்சி எனும் அமைப்பினை மூன்று முக்கிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், இம்மன்றங்கள் வகுத்தளிக்கும் கொள்கைகளை, திட்டங்களை, சட்டங்களை, நிறைவேற்றும் நிருவாக இயந்திரம், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யும் வகையில், அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், ஆகிய மூன்றும் ஆகும். இந்த மூன்று தூண்களும் இணைந்து, செயல்பட்டால்தான், நாட்டில் நல்லாட்சி நிலவும், மக்களின் வாழ்வு சிறக்கும், முன்னேற்றம் தொடரும். அந்த வகையில், தமிழக அரசு, நீதித்துறையுடன் ஒன்றிணைந்து, பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றது. அவற்றில் ஒன்றாக, இன்றைய விழாவும் அமைந்துள்ளது.



நீதி நிருவாகம் என்பது, மக்களாட்சியின் ஒரு சிறப்பான அடையாளமாகும். பேச்சுரிமை, எழுத்துரிமை, வாழ்வுரிமை, சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றிற்கான பாதுகாப்பு, ஆகிய பல்வேறு அடிப்படை உரிமைகளை நமது அரசமைப்புச் சட்டம், அனைத்து குடிமக்களுக்கும் வழங்கியுள்ளது.

**அரசமைப்புச் சட்டம்**

நாட்டில், சட்டத்தின் ஆட்சி நிலவுவதை நீதிமன்றங்கள் உறுதி செய்கின்றன. நமது அரசமைப்புச் சட்டம், பல்வேறு நாடுகளிலுள்ள அரசமைப்பு சட்டங்களின், சிறந்த பல அம்சங்களை உள்ளடக்கியதாக, விளங்கு கிறது. இந்த சட்டத்தின் அடிப்படையிலேயே, நமது ஆட்சிமுறையானது, நாடாளுமன்றம், சட்டமன்றம், ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளது. சுதந்திர மடைந்து 63 ஆண்டுகள் ஆகியுள்ளன. குடியரசாக இந்த நாடு உருவாகி 60 ஆண்டுகள் ஆகியுள்ளன. பல்வேறு, கலாச்சாரம், பண்பாடு, மொழி, இனம், ஆகியவற்றை கொண்ட நமது நாட்டை, இணைக்கின்ற ஒரு வலுவான சக்தியாக, அரசமைப்பு சட்டமும், அதன் அடிப்படையில், உருவாக்கப்பட் டுள்ள சட்ட மன்றங்கள், நிருவாக அமைப்பு, நீதித்துறை ஆகியவை விளங்குகின்றன.

இவற்றின் மீது, இந்த நாட்டில் வாழுகின்ற 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாகவே, நமது ஜனநாயக முறையும், நீதிநிருவாக முறையும் அமைந் துள்ளன. இந்த அமைப்பு முறைகள், முழுமையாக வெற்றிபெற வேண்டுமென்றால், மக்களுக்கு ஆற்ற வேண்டிய, கடமைகளை, பொறுப்புகளை, சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்றால், சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை, அவர்களுக்கு இடையே நிலவுகின்ற வழக்குகளின் தீர்ப்புகளை, விரைவாக, தாமதமின்றி வழங்கிட வேண்டும். அதுமட்டுமே, இந்த அமைப்புகளின் செயல்திறனுக்கும், நம்பகத் தன்மைக்கும், தேவைக்கும், உரைகல்லாக விளங்கும். நீதி வழங்குவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியமானது, அதனை விரைவாக வழங்குவதாகும். தாமதமாக வழங்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதியாகும் என்பதை நாம் அறிவோம்.

ஆக, முறையான சட்ட அடிப்படையிலான, நியாய மான, தீர்வுகளை, தீர்ப்புகளை வழங்கு வதற்கு, நீதித் துறையானது முழுமையான அளவில், வலிமையுடை யதாக அமைந்திட வேண்டும். அதற்கு அரசின் முழு ஒத்துழைப்பும், பங்களிப்பும், மிகமிக அவசியமாகும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் நீதித்துறையின் தேவைகளைப் பொறுத்து, தமிழக அரசு, ஆற்றி வருகின்ற பணிகளை, நிறைவேற்றி வருகின்ற திட்டங்களை, ஒதுக்கீடு செய்துள்ள நிதியினை பற்றி தமிழக சட்ட அமைச்சர் அவர்கள், இங்கு குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பெருகி வருகின்ற வழக்குகளின் எண் ணிக்கை, புதிது புதிதாக தோன்றுகின்ற சட்ட சிக்கல்கள், ஆகியவற்றின் காரணமாக நீதிமன்றங்களின் பணிகள் அதிகரித்துள்ளன, வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந் துள்ளது, தீர்ப்புகள் வழங்கப்படும் கால இடைவெளி நீண்டுள்ளது. இவற்றை சமாளித்திட, நீதித்துறைக்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும், பணியாளர்களையும், ஏற்படுத்தி தர வேண்டிய பொறுப்பு, அரசுக்கு கூடுதலாக ஏற்பட்டுள்ளது. வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காக உயர்நீதிமன்ற நீதிபதிகள், இதர நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கையும், அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகின்றன. எனினும், இதற்கேற்ப, உள்கட்டமைப்பு வசதிகளும் உயர்த்தப்பட வேண்டும். அமைச்சு பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது அவசியமாகும். இதனை தமிழக அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**பயிற்சி மிக அவசியமானவை**

இதற்கு மேலும் முக்கியத்துவம் அளிக்கப்படும். வழக்குகளை சிறந்த முறையில் விரைவாக தீர்ப்பதற்கு, சட்டம், விதிமுறைகள், மற்றும் பல்வேறு நீதிமன்றங்களில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகள் ஆகியவற்றைக் குறித்த தகவல்கள், மிகவும் அவசியமாகும். அதற்கு, இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள மண்டல பயிற்சி மையம் போன்றவை, மிகவும் உதவியாக அமையும் என நம்புகிறேன். தொடர்ச்சியாக பெறுகின்ற பயிற்சிகளே, நமக்கு சட்டத்தின் நோக்கத்தை, தற்கால சூழ்நிலை அடிப்படையில் விளக்கும் என்பதால், இத்தகைய பயிற்சிகள் மிகவும் அவசியமானவை.

அதேபோல், வழக்குகளை, நீண்ட நெடிய குற்றவியல் மற்றும் உரிமையியல் விசாரணை சட்டங்கள் மற்றும் சாட்சிய சட்டங்கள் அடிப்படையில், விசாரித்து, தீர்வு செய்வதற்கு பதிலாக மக்கள்–நீதிமன்றங்கள், மாற்றுத் தீர்வு முறை மையங்கள், மற்றும் விரைவு நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்வது, பெருகியுள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர் நீதியை விரைவாக பெறுவதற்கும், மிகவும் உதவும். எனவே, மக்கள் நீதிமன்றங்கள், மாற்றுத் தீர்வு முறை மையங்கள் மற்றும் விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அவற்றின் செயல்பாட்டை ஊக்குவிக்க வேண்டியது, இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அரசு, நீதிமன்றங்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், ஆகியோர் ஒருங்கிணைந்து, அர்ப்பணிப்பு மனப்பான்மை யோடு செயல்பட்டால்தான், நீதிநிருவாகத்தை சிறந்த செயல்திறன் உள்ளதாக உருவாக்க முடியும். பல ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட, விசாரணை சட்ட நடைமுறைகளை, விதிமுறைகளை, நிருவாக நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினையை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பரந்த மனப்பான்மையோடு, அணுகி, விரைவில் உரிய தீர்வினை கண்டு, புதிய நடைமுறைகளை உருவாக்க வேண்டும். அதுமட்டுமே, பொதுமக்கள், அரசு மற்றும் நீதி

வழங்கும் அமைப்புகள், ஆகியவற்றின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்கின்ற நடவடிக்கையாக அமையும். இல்லாவிடில், தாமதமாக கிடைக்கின்ற நீதியும், பெருகி வரும் வழக்குகளின் எண்ணிக்கையும், நீதிநிருவாக அமைப்புகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் மீது, மக்களின் நம்பிக்கையின்மையை மேலும் உறுதிசெய்வதாக அமைந்துவிடும். இதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உரிமையியல் நீதிமன்றம் முதல் உயர்நீதிமன்றம் வரை, தேவைப்படுகின்ற புதிய கட்டடங்கள், பழுது நீக்கும் பணிகள், வாகனங்கள், அமைச்சு பணியாளர்கள், குடியிருப்புகள், ஆகியவற்றின் தேவை குறித்து, தமிழக அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

I would like to assure, to the Hon'ble Justice, Supreme Court of India,

Hon'ble Chief Justice, High Court of Madras, and to the Hon'ble Judges of, High Court Madras and Madurai branch,

that, the Government of Tamil Nadu is, always ready and willing, to fulfill the needs and requirements of, the Judiciary and legal fraternity, to the maximum best possible extent, that too, at the earliest possible time.

This Government will continue, to extend the full support, co-operation, and assistance, to the Judiciary in the same manner, in future also.

நீதித்துறையின் சிறப்பான, மேம்பட்ட, விரைவான செயலாக்கத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை செய்து, பணிகளை விரைவுபடுத்துவதில், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, இந்தியாவிலேயே முதன்மைபெற்ற மாநிலமாக விளங்குகிறது என்பதை, இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கூடுதலாக தேவைப்படும் அனைத்து உள்கட்டமைப்பு வசதி களையும் ஏற்படுத்திட, தேவையான நிதி ஒதுக்கீட்டினை செய்திடவும், பணிகளை விரைவில் மேற்கொள்ளவும், இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும் என்பதையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்விழாவில் மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி திரு. பி.சதாசிவம், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. எம். யூசுப் இக்பால், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு.எலிப்பி.தர்மாராவ், நீதிபதி எப்.எம்.இப்ராகீம் கலிபுல்லா, நீதிபதி திருமதி. ஆர் பானுமதி, நீதிபதி பி.ஜோதிமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். ❖



மதுரை மாவட்டம், தாதம்பட்டியில், மாண்புமிகு மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்கள், மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவை தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன், மாண்புமிகு கைத்தறி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. அ. தமிழரசி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் (18.12.2010)

# கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது

பள்ளிக் கல்வித்துறையில் 1,103 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 3.12.2010 அன்று ஆற்றிய உரை.

**ப**ள்ளிக் கல்வித் துறையின் சார்பில், சிறப்பு ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் மற்றும் இசை ஆசிரியர்கள் 851 பேருக்கும், கருணை அடிப்படையில் 62 பேருக்கும் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 190 தட்டச்சர்களுக்கும், ஆக மொத்தம் 1,103 பேர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ், தமிழகம் கல்வித் துறையின் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பள்ளிக் கல்வித் துறை, தரமான கல்வியை வழங்கி வருகிறது.



2006ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் அரசு அமைந்த பின்னர் இதுவரை தமிழகத்தில் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 466 பேர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வித் துறையில் மட்டும் 57,104 பேர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி இயக்ககத்தில், இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், ஆசிரியர் பயிற்றுநர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், சிறப்பு ஆசிரியர்கள், தொழிலாசியர்கள், கணினி ஆசிரியர்கள், விவசாய ஆசிரியர்கள் என 27,915 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தொடக்கக் கல்வி இயக்ககத்தில் 26,451 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் விரிவுரையாளர்களாக 248 பேர்களும், கருணை அடிப்படையில் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 699 பேர்களும், அரசுத் தேர்வாணையத்தின் மூலம் 741 பேர்களுக்கும், ஆகமொத்தம், கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக்கல்வித் துறையில் மட்டும் 57,104 பேர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 45,987 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில், அதாவது அவர்கள் பெறவேண்டிய ஊதியத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஊதியம் மட்டும் பெறும் நிலையில் நியமனம் செய்யப்பட்டு

இருந்தனர். 2006ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன் மேற்படி 45,987 ஆசிரியர்களுக்கும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கி, ஒவ்வொரு ஆசிரியரும் தாம் பெற்று வந்த ஊதியத்தை விட மூன்று மடங்கு அதிகம் பெற்று மகிழத்தக்க வகையில் ஆணையிட்டு நிறைவேற்றித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டில் 2010–11 கல்வியாண்டிற்கு ரூ.10,147.56 கோடி பள்ளிக்கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ள அரசு கலைஞர் அரசு. கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 569 புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு உள்ளன. 2,726 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 645 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 570 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்படுவதும் தமிழகத்தில் தான்.

அதுமட்டுமல்ல, ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும் தமிழகத்தில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கணினிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்தில், தமிழகத்தில் 1,686 கணினிப் பயிற்றுநர்கள் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசில் எல்லாத் துறையும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் கல்வித்துறை இந்திய அளவில் ஒரு முன்மாதிரி மாநிலமாக செயல்பட்டு வருகிறது. கடந்த அ.தி.மு.க ஆட்சியில் இருந்த பணி நியமன தடைச் சட்டம், எஸ்மா, டெஸ்மா என்ற அடக்குமுறைச் சட்டங்கள் கலைஞர் ஆட்சியில் தான் ரத்து செய்யப்பட்டன.

கடந்த ஆட்சியில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களது உரிமையைக் கூட கேட்க முடியாத நிலை இருந்தது. சுமார் 1 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களையும் ஒரே நாளில் பணிநீக்கம் செய்த ஆட்சி கடந்த ஆட்சி. இந்த துயரச் சம்பவத்தில் அதிர்ச்சி அடைந்து பல ஆசிரியர்கள் இறந்த துக்கமான நிகழ்ச்சிகளும் கடந்த ஆட்சியில் ஏற்பட்டது. கடந்த 2006ஆம் ஆண்டு தேர்தலின் போது கலைஞர் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதியின்படி, அந்த கருப்பு சட்டங்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டு, ஆசிரியர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்ற ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி.

இன்று பணிநியமனம் பெற்றுள்ள அனைவரும் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து சிறந்த மாணவர்களை உருவாக்குகின்ற வகையில் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.க.கணேசன், இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் முனைவர் பி.ஏ.இராமையா,இ.ஆ.ப., உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

★ ★ ★

---

## கடல்கொண்ட பூம்புகார் பகுதியையும், குமரிக் கண்டத்தையும் அகழாய்வு செய்திட வல்லுநர் குழு நியமனம்!

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை!**

உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளங்கள் எல்லாம் மகிழ கோவை மாநகரில் கடந்த ஜூன் திங்களில் எழுச்சியுடன் நடைபெற்று மகத்தான வெற்றிகண்ட முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், "கடல்கொண்ட பூம்புகார் பகுதியையும், குமரிக் கண்டத்தையும் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி செய்திடத் தேவையான திட்டம் வகுத்துச் செயல்படுத்திட வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது'' எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் கடல்கொண்ட பூம்புகார் குறித்த ஆழ்கடல் அகழ்வாராய்ச்சியைத் தமிழக அரசின் தொல்லியல் துறையும், குமரிக் கண்டம் குறித்த அகழ்வாராய்ச்சியைத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொல்லியல் துறையும் மேற்கொள்ளலாம் என்றும்;

இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது என்றும், தமிழக அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் அக்குழுவின் தலைவராகவும், கோவாவில் உள்ள தேசிய கடல்சார் கழகத்தின் தலைவர், சென்னை தேசிய கடல்வள தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் அல்லது விஞ்ஞானி பா.சசிசேகரன், சென்னையில் உள்ள மத்திய தொல்லியல் துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அல்லது அவரது பிரதிநிதி, தொல்லியல் துறையின் ஓய்வு பெற்ற இயக்குநர் திரு.நடனகாசிநாதன் ஆகியோர் உறுப்பினர்களாகவும், தொல்லியல்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் உறுப்பினர் மற்றும் ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்படுகின்றனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.12.2010 அன்று ஆணையிட்டுள்ளார்.

# கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு ரூ.2,250 கோடி மதிப்பில் 3 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது

18.12.2010 அன்று, வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், வெங்களாபுரத்தில் புதிய சமத்துவபுரத்தை திறந்துவைத்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.

**ஊ**ரக வளர்ச்சித்துறையின் சார்பில் கந்திலி ஊராட்சி ஒன்றியம் வெங்களாபுரம் ஊராட்சியில் ரூ.2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு இன்றையதினம் பெரியார் சமத்துவபுரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,210 வீடுகள் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சிப் பணிகள் உள்ளிட்ட ரூ.39 கோடியே 45 இலட்சம் மதிப்பீட்டிலான 2,935 பணிகளும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும், பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ.21 கோடியே 54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 17 அரசு மேல்நிலைப்பள்ளி கட்டடங்கள், சுற்றுலா மாளிகை, சார் பதிவாளர் அலுவலகம், உள்ளிட்ட ரூ.25 கோடியே 11 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 27 பணிகளும், பேரூராட்சிகள் துறையின் சார்பில் ரூ.1 கோடியே 46 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிகளும், தாட்கோ நிறுவனத்தின் சார்பில் ரூ.4 கோடியே 99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 17 பணிகளும், நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் ரூ.1 கோடியே 44 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3 பணிகளும், வேலூர் மாநகராட்சி சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இன்று மாலை திறந்து வைக்கப்படவுள்ள கட்டடமும் என சுமார் ரூ.79 கோடியே 46 இலட்சம் மதிப்பீட்டில் 2,989 பணிகள் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ரூ.32 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 43 அரசு மேல்நிலைப்பள்ளி கட்டடங்கள்






மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் என ரூ.32 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டிலான 44 பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த விழாவில் மகளிர் திட்டத்தின் மூலமாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி, நேரடி கடன், பொருளாதாரக் கடன், பெருங்கடன் என மொத்தம் 4,392 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 36 கோடியே 76 இலட்சம் வழங்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் சார்பில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.24 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் 6,853 பயனாளிகளுக்கும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.2 கோடியே 57 இலட்சம் நிதிஉதவி உள்ளிட்ட 11 ஆயிரத்து 140 பயனாளிகளுக்கு ரூ.27 கோடியே 7 இலட்சம் நிதியுதவியும்,

மேலும் சமூக நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் பல்வேறு நிதியுதவி திட்டத்தின்கீழ் 348 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 5 இலட்சம் நிதியுதவி என ரூ.64 கோடியே 88 இலட்சம் மதிப்பீட்டில் 15,880 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் என ஆக மொத்தம் இன்றைய விழாவின் மூலம் ரூ.176 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டிலான அடிக்கல் நாட்டும் பணிகள், திறப்பு விழா பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

பெரியார் நினைவு சமத்துவபுரம் என்பது முதல்வர் கலைஞர் அவர்கள் 5–ஆவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு உருவாக்கியது இல்லை. கடந்த 1996–ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது திட்டமிடப்பட்டு, 1997–இல் தொடங்கப்பட்டது. பெரியார் கண்ட கனவு இது. தமிழக முதல்வர் கலைஞர் கூறிய உதாரணம், அத்தி மரத்தின் உச்சியிலும், கிளையிலும், அடிமரத்திலும் காய்கள் காய்க்கும். அடிமரத்தில் காய்ப்பதை பரங்கிக்காய் என்றோ, கிளையில் காய்ப்பதை புடலங்காய் என்றோர், உச்சியில் காய்ப்பதை வெண்டக்காய் என்றோ சொல்வது இல்லை. அத்திக்காய் என்று தான் சொல்கிறோம்.

மேல்சாதி, கீழ்சாதி கூடாது சாதி ஒழிக என்று சொன்னால் மட்டும்போதாது. சாதி என்பது சதியின் காரணமாக சதிக்கு கால் முளைத்து சாதியாக மாறியது. அத்தோடு நின்றதா "தி" என்ற எழுத்திற்கு கொம்பு முளைத்து "தீ" என மாறியது. "தீ" யை அணைக்க வேண்டிய கடமை என்று தலைவர் கலைஞர் அடிக்கடி குறிப்பிடுவார்கள். அனைத்து இனத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றாக வாழ 1997–2001 வரை 145 சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டது. 2001–க்கு பிறகு ஆட்சி மாற்றம் காரணமாக அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து இத்திட்டத்தை கிடப்பில் போட்டது.

மீண்டும் தி.மு.க. ஆட்சி பதவி ஏற்றபின் ரூ.14 கோடியே 50 இலட்சம் செலவில் பாழடைந்த சமத்துவ புரங்களை சீரமைத்து பராமரிக்கப்பட்டதுடன், தந்தை பெரியார் அவர்கள் 95 வயது வரை வாழ்ந்ததை

நினைவு கூறும் வகையில் 23.1.2008 அன்று ஆளுநர் உரையில் 95 சமத்துவபுரங்கள் அமைக்க அறிவித்ததுடன் முந்தைய 145 சமத்துவபுரங்களில் பெரியார் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தார். 2008–2009ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டது. கடந்த நிதியாண்டில் 2009–2010ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 30 இடங்களிலும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று அதில் 12 சமத்துவபுரங்கள் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இது 13–ஆவது சமத்துவபுரமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் அமையும் 187–ஆவது சமத்துவபுரமாகும். இதன் தொடர்ச்சியாக 17 சமத்துவபுரங்களும் விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 21 இலட்சம் குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்ட கணக்கெடுக்கப்பட்டு இந்த ஆண்டு ரூ.2,250 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்த வரை 1 இலட்சத்து 30 ஆயிரத்து 929 குடிசை வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு 97 ஆயிரத்து 59 குடிசை வீடுகள் கட்டித் தர தகுதியானவை என்று கணக்கெடுக்கப்பட்டு அதில் 2010–2011–ஆம் ஆண்டில் 15,479 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதில் இன்று கட்டி முடிக்கப்பட்ட 1,210 வீடுகளுக்கான சாவியை பயனாளி களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். மீதமுள்ள வீடுகள் ஜனவரி 2011–ஆம் மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

மகளிர் சுயஉதவிக்குழு 1989–இல் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. இன்று மகளிர் குழுக்கள் கம்பீரமாக வளர்ந்து உள்ளது. இன்று முன்னுக்கு வருபவர்கள் பெண்களாகவும், பெண்கள் இல்லாமல் வெற்றி பெற முடியாது என்ற நிலையும் உருவாகியுள்ளது. வேலூர் மாவட்டத்தில் 7,271 மகளிர் குழுக்களுக்கு 3 முறை சுழல்நிதி வழங்கினேன். தற்போது 4,392 பேருக்கு சுழல்நிதி வழங்க உள்ளேன். தமிழகத்தில் 1 இலட்சத்து 71 ஆயிரத்து 837 குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் கடன்கள் என்னால் நேரடியாக 110 மணி நேரத்திற்கு மேலாக செலவிடப்பட்டு வழங்கியுள்ளேன்.

வரும் 2011இல் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி. ஆறாவது முறையாக மீண்டும் தலைவர் கலைஞர் முதல்வர் ஆவார்.

வேலூர் மாவட்டத்தின் குடிநீர் குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் பேசினோம். இத் திட்டத்திற்காக ரூ.1,295 கோடி நிதி தேவை. இந்நிதி அட்கோ 90 சதவீதமும், தமிழக அரசு 10 சதவீதமும் நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி வேலூர் மாநகராட்சி மற்றும் அதனுடன் இணைந்துள்ள சத்துவாச்சாரி, தாராபடவேடு, தொரப்பாடி, கழிஞ்சூர், சேண்பாக்கம், காந்திநகர், மற்றும் 11 நகராட்சிகள் 5 பேரூராட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 18 லட்சத்து 68 ஆயிரம்பேர் பயனடைவர். இத்திட்டம் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்''.

❖ ❖ ❖



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வேலூர் மாநகராட்சி புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. ராஜேந்திரன், இ.ஆ.ப., வணக்கத்திற்குரிய வேலூர் மாநகராட்சி மேயர் திரு.ப. கார்த்திகேயன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர். (18.12.2010)



2006–2007இல் நிதி–நிலை அறிக்கையில் ''அம்பேத்கர்'' திரைப்படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டால், தமிழக அரசின் சார்பில் ரூ.10 இலட்சம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, மொழி மாற்றம் செய்யப்பட்டு, 3.12.2010 அன்று தமிழில் ''அம்பேத்கர்'' திரைப்படம் வெளியிடப்படுவதையொட்டி, அன்றைய தினமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழக துணை பொது மேலாளர் திரு.டி.ராமகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.ரா. சிவகுமார், இ.ஆ.ப., செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.கா. பாஸ்கரன், இ.ஆ.ப., தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழக துணை மேலாளர் திரு.லட்சுமி நாராயணன் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், பூந்தமல்லி அரசு தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டும் பயிற்சி முடித்து, வேலை கிடைக்காமல் இருந்த 33 மாற்றுத் திறனாளிகளுக்கு அனைத்து விதிகளையும் தளர்த்தி, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணி நியமன ஆணைகளையும், கருணை அடிப்படையில் 18 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.ரா. சிவகுமார், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் திரு.து. விவேகானந்தன், இ.ஆ.ப., உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# சென்னையில் மட்டும் 2 இலட்சத்து 41 ஆயிரத்து 543 பேருக்கு அனைத்து வகையான முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விழாவில்,
முதியோர் உதவித்தொகை மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி
ஆற்றிய உரை (15.12.2010)



முதியோர் உதவித்தொகை மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று நடைபெறும் இந்த சிறப்பான விழாவில், ஆயிரம் விளக்கு தொகுதி மற்றும் சேப்பாக்கம் தொகுதியில் உள்ள 845 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப் பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. நபர் ஒருவருக்கு மாதம் உதவித் தொகை ரூபாய் 400 வீதம் 845 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாயும், அதேபோன்று, அரசு நலத்திட்ட உதவிகள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ் 15 பெண்களுக்கு ரூபாய் 25,000 வீதம் ரூபாய் 3 இலட்சத்து 75 ஆயிரமும், சிவகாமி அம்மையார் நினைவு, 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு குடும்பத்திலுள்ள இரண்டு பெண் குழந்தைகளுக்கு ரூபாய் 30,400 வீதம், 15 குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 56 ஆயிரமும், மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் எந்திரம் 5 நபர்களுக்கு ரூபாய் 18 ஆயிரத்து 475 மதிப்பீட்டிலும், பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கடன் பெறும் மாற்றுத் திறனாளிகள் 4 பேர்களுக்கு 38 ஆயிரத்து 750 ரூபாயும், ஆக மொத்தம் இன்றைக்கு 884 பயனாளிகளுக்கு 12 இலட்சத்து 26 ஆயிரத்து 225 ரூபாய் மதிப்பீட்டிலான உதவிகள் இந்த நிகழ்ச்சியின் மூலம் வழங்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய மாவட்ட ஆட்சியர் சொன்னதைப் போல், தலைவர் கலைஞர் ஆட்சியில் பல சிறப்பான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகள், ஆயிரம் விளக்கு சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு இன்றைய தினம் வழங்கப்பட உள்ளது.

தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்று சென்னை மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் முதியோர் உதவித் தொகை 22 ஆயிரத்து 16 நபர்களுக்கு ரூபாய் 88 இலட்சமும், மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை 4,307 நபர்களுக்கு ரூபாய் 17 இலட்சமும், விதவை உதவித்தொகை 5 ஆயிரத்து 25 நபர்களுக்கு ரூபாய் 2 கோடியும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்தொகையாக 4 ஆயிரத்து 655 நபர்களுக்கு 18 இலட்சத்து 60 ஆயிரமும், திருமணமாகாத, வாழ்வாதாரம் இல்லாத முதிர்கன்னியர்களுக்கு உதவித் தொகையாக 963 நபர்களுக்கு 3 இலட்சத்து 58 ஆயிரமும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலம் இவர்கள் தொடர்ந்து, இந்த நிதியுதவியைப் பெற்று வருகின்றனர் என்பதை குறிப்பிட்டுக் காட்ட கடமைப் பட்டுள்ளேன்.

சென்னை மாவட்டத்தில் இன்றைக்கு அனைத்து வகையான முதியோர் உதவித் தொகைகளையும் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 543 ஆகும். இதற்காக சென்னை மாவட்டத்தில் மட்டும் மாதம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற உதவித்தொகை ரூபாய் 9 கோடியே 66 இலட்சம் ஆகும். இதுவரை நான் சொன்னது, சென்னை மாவட்டத்திற்கான நலத்திட்ட உதவிகள் ஆகும். தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மாதம் 200 ரூபாய் என்பது 1.9.2006இல் 400 ரூபாய் எனவும், 24.11.2010 முதல் 500 ரூபாய் என மேலும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 21 இலட்சத்து 26 ஆயிரத்து 850 பேர் மாதம் 500 ரூபாய் வீதம் உதவித்தொகை பெறுகின்றனர்.

சென்னை மாநகராட்சி மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் முடிக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகள் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால், ஏராளமான சாலைகள் புதிப்பிக்கப் பட்டுள்ளன. நடைபாதைகள் புதியதாக அமைக்கப் பட்டுள்ளன. பல்வேறு பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன. நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன், கடந்த நான்கரை ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி மூலம் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் சுமார் 1,122 வளர்ச்சிப் பணிகள் ரூபாய் 103 கோடியே 67 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சி மூலம் நிவாரண உதவிகளை பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துகளை இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், தலைவர் கலைஞர் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான வாய்ப்பிற்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியினை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இந்நிகழ்ச்சியில், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா. சுப்பிரமணியன், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. வெ. ஷோபனா, இ.ஆ.ப., உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ★



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டியில் ரூ.60 கோடி மதிப்பில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என். செல்வராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி.) பூங்கோதை உள்ளிட்டோர் உள்ளனர். (9.12.2010)



# தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கலைஞர் வீடு வழங்கும் திட்டப் பயனாளிகள் அனைவருக்கும் அடையாள அட்டைகள்

தமிழகத்தைக் குடிசையில்லாத மாநிலமாக மாற்றிடும் உன்னத நோக்கத்துடன் 21 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள இத்திட்டத்தின்கீழ் 2010–11 முதல் 2015–16 வரையிலான ஆறு ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட முடிவு செய்து, 2010–11 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கான்கிரீட் வீடுகள் பெறத் தகுதி வாய்ந்த எஞ்சிய குடிசை வாழ் மக்களுக்கு எடுக்கப்பட்ட கணக் கெடுப்பின் அடிப்படையில் 2010 டிசம்பர் 7–ஆம் தேதி முதல் 9–ஆம் தேதி வரை அடையாள அட்டை வழங்க அரசு முடிவு செய்து அறிவித்திருந்தது. எனினும், 7.12.2010 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சிறப்பு அமைச்சரவை கூட்டம் நடைபெற்றதால், இந்த அடையாள அட்டை வழங்கும் பணி 8.12.2010 தொடங்கி 10.12.2010 வரை ஒரே கால கட்டத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது.

❖ ❖ ❖

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொடிநாள் செய்தி



நமது நாட்டின் எல்லைப் பகுதிகளைக் காக்கும் பணிகளிலும், இயற்கைச் சீற்றங்களின்போது துயர் மூழ்கிடும் மக்களைக் காத்திடும் மீட்புப் பணிகளிலும் இன்னுயிர் ஈந்தும், எண்ணற்ற இன்னல்களைச் சுமந்தும் தியாகங்கள் பல புரிந்திடும் நமது முப்படை வீரர்களின் தீரம் நிறைந்த தியாகத் திருப்பணிகளை நினைந்து நெஞ்சாரப் போற்றும் திருநாள்! டிசம்பர் திங்கள் 7ம் நாள்! படை வீரர்கள் கொடி நாள்!

நாட்டின் எல்லைகளை மட்டுமல்லாமல், இறையாண்மையைக் காப்பதிலும் முன் நிற்பவர்கள் நம் முப்படை வீரர்கள். நாடு காக்கும் நற்பணியில் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டுள்ள இப்படை வீரர்களின் குடும்பங்களைக் காத்திடுவது நம்முடைய தலையாய கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றிட நமக்கு வாய்ப்பளித்திடும் நன்னாள் இந்தக் கொடிநாள்!

இன்னல் களைவதில் – இதயம் கசிந்துருகி நிவாரண நிதிகள் வழங்குவதில் தமிழக மக்கள் இந்தியத் திருநாட்டிற்கு வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள் எனச் சான்றோர்கள் போற்றிய நிகழ்வுகள் பலவுண்டு. அந்த நிகழ்வுகளின் வரிசையில் இடம்பெறத்தக்க வகையில் இந்த ஆண்டின் கொடிநாள் நிகழ்ச்சியிலும், நமது படை வீரர்களின் குடும்ப நலன்களைக் காத்திடத் தாராளமாக நிதி வழங்கிப் புகழ் சேர்த்திட அருமைத் தமிழக மக்களை அன்போடு வேண்டுகிறேன். ★

# கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன

29.11.2010 அன்று விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில், பெருங்கைத்தறிக் குழுமம் அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.



இந்த பகுதிக்கு 87 கோடியே 68 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்படும் விருதுநகர் கைத்தறிப் பெருங்குழுமம் அடிக்கல் நாட்டுவிழா மற்றும் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 403 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என இன்றைய தினம் சிறப்புடன் நடத்தும் இந்த விழாவில் கலந்துகொண்டு, உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த மகழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கைத்தறித் தொழில். நேர்த்தியான நெசவு வேலைபாடுகளுக்கு பெயர்பெற்ற கைத்தறித் தொழில் ஜவுளி உற்பத்தியில் தமிழகம் பெரும் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் கைத்திறன் மிக்க நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் நேர்த்திமிகு பட்டு சேலைகள், பருத்தி இரகங்கள், வேட்டிகள், லுங்கிகள் துண்டுகள் போன்ற கைத்தறி இரகங்கள் நம் நாட்டில் மட்டுமின்றி அயல்நாட்டினராலும் விரும்பி வாங்கப் படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 4 இலட்சத்து 13 ஆயிரம் கைத்தறிகள் மூலமாக சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்து வதற்கும், முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க, தென்மாவட்டங்களில் வாழும் கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காக, மத்திய ஜவுளித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தயாநிதிமாறன் அவர்களால், விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி குழுமத்திட்டத்தின் கீழ், கைத்தறி பெருங்குழுமம் ஒன்று துவங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்காக, மத்திய அரசின் மானியத்தொகை ரூ.70 கோடி, மாநில அரசு மற்றும் பயனாளிகள் பங்களிப்புத் தொகை ரூ. 17 கோடியே 68 இலட்சம் ஆகியவற்றை சேர்த்து மொத்தம் ரூ.87 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டில் இன்றைய தினம் கைத்தறிப் பெருங்குழுமத் திட்டம் செயல்படுத்தப்பட அடிக்கல் நாட்டப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்படுவதன் மூலம் அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், இராஜபாளையம், எமனேஸ்வரம், காரைக்குடி, செல்லூர், நிலையூர், சங்கரன்கோவில், வீரவநல்லூர், கடையநல்லூர், எட்டயபுரம், மற்றும் சாயர்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள

சுமார் 30,000 நெசவாளர்கள், 5 ஆண்டுகளில் பயன்பெற உள்ளனர்.

கைத்தறி நெசவாளர்களின் சிரமத்தினை குறைத்து, உற்பத்தியினை பெருக்குவதன் மூலம் நெசவாளர்களின் வருவாயினை உயர்த்துவதற்குத் தேவையான பெடல் தறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுடன் நெசவாளர் நிறைந்து வாழும் பகுதிகளில் நெசவுத் தொழிலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளான பொதுவசதி மையங்கள், சாயச்சாலைகள் மற்றும் தொழிற்கூடங்கள் ஆகியன இத்திட்டத்தில் உருவாக்கப்பட உள்ளன.

நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களை நல்ல விலையில் விற்பனை செய்வதற்கு இம்மாவட்டத்தில் முக்கிய நகரங்களில் நவீன விற்பனைக் கூடங்கள் கட்டப்பட உள்ளன. இதுமட்டுமின்றி, நெசவளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் வகையில், இக்குழுமத்திற்கு உட்பட்ட அனைத்து நெசவாளர் குடும்பங்களுக்கும் எந்த நேரத்திலும் உபயோகிக்கப்படும் விளக்குகள் வழங்கப்பட உள்ளன.

இந்த உன்னத திட்டத்தின் மூலமும் சுமார் 30,000 நெசவாளர்கள் மத்தியில் நிலவிவரும் நீண்டகால இடர்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டு, அவர்களின் வருவாய் உயர்வதுடன் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் வழிவகை காணப்பட்டுள்ளது.

ரூபாய் 10 இலட்சம் மதிப்பிலான 16 பெடல் தறிகள், 50 மின் விசையுடன் கூடிய தார் சுற்றும் இயந்திரங்கள், 50 ஜாக்கார்டு பெட்டிகள், 2 காற்றமுத்த ஜாக்கார்டு இயந்திரங்கள், 50 அச்சு மற்றும் விழுதுகள், 50 டாபி பெட்டிகள், 50 மின்கல விளக்குகள் மற்றும் 150 தறிக்கூடங்கள் இன்று 403 பயனாளிகளுக்கு வழங்கப் படுகின்றன.

சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய தொகையான ரூ.50–ஐ நெசவாளர் நலன் கருதி அரசே செலுத்தி வருகின்றது. ஆண்டு தோறும் அரசுத் தொகையுடன் நெசவாளர் செலுத்த வேண்டிய தொகையும் சேர்த்து ரூ.1,791 இலட்சம் ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்திற்கு செலுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் 3.90 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கைத்தறித் தொழில். நேர்த்தியான நெசவு வேலைபாடுகளுக்கு பெயர்பெற்ற கைத்தறித் தொழில் ஜவுளி உற்பத்தியில் தமிழகம் பெரும் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் கைத்திறன் மிக்க நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் நேர்த்திமிகு பட்டு சேலைகள், பருத்தி இரகங்கள், வேட்டிகள், லுங்கிகள் துண்டுகள் போன்ற கைத்தறி இரகங்கள் நம் நாட்டில் மட்டுமின்றி அயல்நாட்டினராலும் விரும்பி வாங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 4 இலட்சத்து 13 ஆயிரம் கைத்தறிகள் மூலமாக சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.**

இந்த மகத்தான திட்டத்தினை தமிழ்நாட்டின் விருதுநகர் பகுதியில் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், ஜவுளித்தொழிலை மேம்படுத்துவதில் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,346 கோடி மானியத்தொகையை ஒரே தவணையில் வழங்கியதற்கும், பட்டுத்தொழிலுக்கு பயன் பெற காஞ்சிபுரத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டில், பட்டுப்பூங்கா அமைத்திட அனுமதி வழங்கியதற்கும், திருப்பூர் மாவட்டத்தில் சாய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக ரூ.200 கோடி நிதி உதவி அனுமதித்து, அதில் முதல்கட்டமாக ரூ.100 கோடி வழங்கி நீண்டகாலமாக சாயப்பட்டறை தொழிலில் நிலவி வந்த

பிரச்சினைக்கு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி தீர்வு கண்டமைக்கும், மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தம்பி தயாநிதி மாறன் அவர்களுக்கு, எனது பாராட்டை தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை செய்து காட்டியுள்ளார். அவர் சொல்லாததையும் செய்து உள்ளார். கடந்த தேர்தலின் போது 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு தருவேன் என்று கூறினார். எங்களுக்கு கூட இது சாத்தியப்படுமா என்ற சந்தேகம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்றதும் 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுத்தார். தற்போது நிலை என்ன ? ஒரு கிலோ அரிசியை 1 ரூபாய்க்கு கொடுத்து சாதனை படைத்துள்ளார். 1989ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சத்துணவு குழந்தைகளுக்கு முட்டை தருவதாக கூறினார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் கலைஞர் என்ன முட்டை தருவது எனக் கூறி முட்டை தருவதை நிறுத்தி விட்டார்கள். கடந்த தேர்தலின் போது நான் ஆட்சிக்கு வந்தால் வாரம் இரண்டு முறை முட்டை தருவதாக கூறியிருந்தார். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2 முட்டைகள் வழங்கி பின்னர் 3 முட்டைகளை தந்து தற்போது வாரம் 5 முட்டைகளை தந்து வருகிறார். மருத்துவக் காப்பீடுத் திட்டம் என்ன தேர்தல் நேரத்தில் சொன்னதா ? இல்லை அந்த திட்டத்தை நிறைவேற்றி அகில இந்திய அளவில், உலக அளவில் அதனை பாராட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு முதல் அமைச்சராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஏழை. எளிய பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டத்தின் கீழ் திருமண நிதி உதவியாக ரூ.5,000 வழங்கப்படும் என முதல்வர் அறிவித்தார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் அந்த திருமண நிதி உதவித் திட்டம் நிறுத்தப்பட்டது. இது பற்றி ஒரு கூட்டத்தில் பேசும்போது புள்ளி விவரங்களுடன் தெரிவித்திருந்தேன். நான் ஒன்றும் வாய்ப்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று கூறிவிடவில்லை. எந்த வருடம் என்ன தொகை வழங்கப்பட்டது என்ற விவரங்களுடன் சொல்லியிருந்தேன். இதற்கு பதிலாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் திருமண நிதிஉதவித் திட்டம் ஒன்றும் நிறுத்தப்படவில்லை. நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டம் தான் நிறுத்தப்பட்டது. அதில் முறைகேடுகள் நடந்ததால் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

திருமண நிதி உதவித் திட்டம் என்பது எம்.ஜி.ஆர். காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா முதல்வராக பொறுப்பேற்றவுடன் கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு திருமண நிதி உதவி அமல்படுத்தப்பட்டது. 1989ஆம் ஆண்டு முதல் அமைச்சராக கலைஞர் பொறுப்பேற்றவுடன் ரூ.5,000ஆக வழங்கப்பட்டு வந்த திருமண நிதி உதவி 2006ஆம் ஆண்டு மீண்டும் பொறுப்பேற்றவுடன் ரூ.15,000ஆக உயர்த்தப்பட்டு, ரூ.20,000 ஆக்கப்பட்டு, தற்போது ரூ.25,000ஆக உயர்த்தி கொடுக்கப்பட்டு வருகிறது. எதிர்கட்சியாக இருப்பவர்கள் ஆளும் கட்சி எதுவும் தவறு செய்தால் அதனை சுட்டிக் காட்டுவது இயல்பு தான். அதனை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டினால், அதனை திருத்திக் கொள்ள தயாராக இருக்கிறோம். கைத்தறி நெசவாளர்களை பொறுத்தமட்டில் முதல்வராக கருணாநிதி பொறுப்பேற்றவுடன் அவர்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்தினோம்.

தேர்தல் நேரத்தில் சொன்னதையும் நிறைவேற்றி, சொல்லாததையும் நிறைவேற்றியவர் முதல் அமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நீங்கள் என்றும் உங்கள் ஆதரவை அளித்திட வேண்டும்.

★

## தெரியுமா?

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த நான்கரை ஆண்டுகளில் 4 இலட்சத்து 67 ஆயிரத்து 419 ஏழைப் பெண்களுக்கு ரூ.882 கோடி நிதியதவி வழங்கப்பட்டுள்ளது.

# அரசிடம் எடுத்து வைக்கும் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன

கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறியில் 30.11.2010 அன்று நடைபெற்ற
மாம்பழத்துறையாறு நீர்த்தேக்கம் திறப்பு விழா,
கலைஞர் வீடு வழங்கும் திட்டப் பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கும் விழா,
மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று தக்கலை பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாம்பழத்துறையாறு நீர்த்தேக்கத்தினை திறந்து வைத்து அதே சமயத்தில் கலைஞர் வீடு வழங்கும் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குதல், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றமைக்கு பெருமை அடைகிறேன். இங்கு உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் களுக்குரிய பாணியில் நின்று சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து சட்டமன்றத்தில் மட்டுமல்லாது இதுபோன்ற அரசு விழாக்களிலும் கோரிக்கைகளை அவர்கள் எடுத்துரைத் தார்கள். கோரிக்கைகளை எடுத்துரைப்பதற்குக் காரணம் தற்போதைய ஆட்சியில்தான் சட்டமன்ற உறுப்பினர்கள்



வைக்கின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகிறது. கோரிக்கைகளை எடுத்துரைத்தாலும், கோரிக்கைகள் எடுத்துரைக்க வாய்ப்பு கிடைக்காத நிலையும், அவை நிறைவேற்றப்படாத நிலையும் கடந்தகால ஆட்சியில் இருந்தது. அதுவும் அவர்களுக்குத் தெரியும்.

கலைஞர் ஆட்சியில் சொன்னதைத்தான் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம். சொல்லாததையும் செய்வோம். தி.மு.க., காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் தங்களது கோரிக்கைகள் எடுத்துரைத்தார்கள். இந்த விழா நடைபெறுவதைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ரூ.20.97 கோடி செலவில் கல்குளம் வட்டத்தைச்சேர்ந்த மாம்பழத்துறை ஆறு நீர்த்தேக்கம் உள்ளிட்ட மூன்று கூட்டுக்குடிநீர் திட்டங்கள், பொதுப்பணித்துறை சார்பில் 4 பணிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் சேரமங்கலத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 580 வீடுகள் உள்ளிட்ட ரூ.4.86 கோடியில் 601 பணிகள், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ரூ.2.83 கோடியில் பேச்சிப்பாறை கோதையாறு சாலையில் பெரிய பாலம், சாந்தபுரத்தில் புதிய பாலம், நீரோடி இராயுமன்துறை சாலையில் புதிய பாலம் உள்ளிட்ட மூன்று பாலங்கள், குடிசைமாற்று வாரியம் சார்பில் கொல்லங்கோடு நீரோடி பகுதியில் 48 மாற்றுக் குடியிருப்புகள் ரூ.1.43 கோடியிலும், ஆக மொத்தம் ரூ.90.18 கோடியில் 618 பணிகள் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இதுபோல நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, அனைவருக்கும் கல்வித்திட்டம் மூலம் வகுப்பறை பணிகள், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் 33 புதிய குடியிருப்புகள் கட்டுதல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் பயிற்சிக் கூடம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது. நலத்திட்ட உதவிகளாக 734 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியமாக தலா ரூபாய் 10 ஆயிரமும், ரூ.4.40 கோடி சுழல் நிதிக்கடனும், 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக ரூ.3.52 கோடியும், 23 சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.23 இலட்சமும், மானியக் கடனாக 110 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3.39 கோடியுமாக மொத்தம் ரூ.37.70 கோடி உள்பட ரூ.139 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் இவ்விழாவின் மூலம் வழங்கப்படுகிறது. இந்நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுயஉதவிக்குழு இந்தியாவிலேயே தமிழகம் தான் முதலிடம் பெற்றுள்ளது. இவ்விழாவில் முதல் வரிசையில் ஆண்கள் அமர்ந்திருந்தாலும், முதலிடத்தில் இருப்பவர்கள் பெண்கள்தான். பெண்கள் யாருடைய தயவும் இன்றி சொந்தக்காலில் நின்றிட வேண்டும் என்பதற்காகவும், சுயமரியாதையுடன் வாழ்ந்திட வேண்டும் என்பதற்காகவும் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஏற்படுத்தினார். பெண்கள் சுயமரியாதையுடன் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்பதற்காக சுய உதவிக்குழு என்ற பெயரையும் வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள், பொதுவாக ஒரு இடத்தில் ஐந்து ஆறு பெண்கள் இருந்தாலே ஒரு சலசலப்பு இருக்கும். ஐம்பது அறுபது பெண்கள் இருந்தால் அது இன்னும் அதிகமாக இருக்கும். ஆனால் இங்கு அமர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் அமைதியுடனும், பொறுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் இங்கே அமர்ந்திருப்பதை பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. பெண்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இவ்விழாவின் மூலம் உணர்கிறேன். எனவேதான் சுயஉதவிக் குழுக்கள் இன்று மாபெரும் அமைப்பாக மகளிர் சுயஉதவிக் குழு உருவாகி இருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 87 ஆயிரத்து 712 குழுக்கள் உருவாகி இருக்கிறது. 4 இலட்சத்து 17 ஆயிரத்து ஐநூறு குழுக்களுக்கு இதுவரை சுழல்நிதி வழங்கப்பட்டிருக்கிறது. 2006ஆம் ஆண்டு 1 இலட்சத்து 65 ஆயிரத்து 694 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் 3.50 இலட்சம் கிலோ மீட்டர் நான் சுற்றுப்பயணம் செய்ததை பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக ஆட்சிக்கு வருபவர்கள் ஆட்சிக்கு வந்து அடுத்த ஆண்டே மக்களை சந்திப்பதில்லை. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுகளாக இவ்வளவு தூரம் சுற்றுவதற்கும் உங்களை சந்திப்பதற்கும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குவதற்கும் நான் மீண்டும் மீண்டும் வருவது நீங்கள் எங்களுக்கு கொடுத்த உற்சாகம். அது மாத்திரம் அல்ல தலைவர் கலைஞர் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை.

1999ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் ரூ.9.50 கோடியில் தொடங்கப்பட்ட மாம்பழத்துறையாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அடுத்து வந்த ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டது. 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2007ஆம் ஆண்டு மீண்டும் மாம்பழத்துறையாறு அணை கட்டும் பணி தொடங்கப்பட்டு இன்று திறக்கப்பட்டுள்ளது. இடையிலே கிடப்பில் போடப்பட்டதால் மீண்டும் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.11.47 கோடி கூடுதல் செலவானது. ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் தாரர்களுக்கும் வேலை வழங்கக் கூடாது என்பதற்காக வேலை நியமன தடைச் சட்டம் அன்று நிறைவேற்றப்பட்டது. தற்போது வேலை நியமன தடைச் சட்டத்தை நீக்கி 27 ஆயிரத்து 189 காவல்துறை நியமனங்களும், அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2 இலட்சத்து 60 ஆயிரத்து ஒன்பது பணி நியமனங்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக 1 இலட்சத்து 14 ஆயிரத்து 332 பணி நியமனங்களும் காலமுறை ஊதியமாக 1 இலட்சத்து 20 ஆயிரத்து 502 பணி



எஸ்மா, டெஸ்மா சட்டத்தைப் பயன்படுத்தி கடந்த ஆட்சியில் டிஸ்மிஸ் செய்தார்கள். இச்சட்டத்தை கடுமையாக எதிர்த்தவர்கள் கம்யூனிஸ்டுகள். அன்றைக்கு கடுமையாக எதிர்த்தவர்கள் இன்று ஏதோ காரணங்களால் மௌனமாக இருக்கின்றார்கள். போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தவுடன் அன்றைய அரசு கொள்ளைக்காரர்களை போல் பல அரசு ஊழியர்களை நடத்தியதால் 25 பேர் தற்கொலை செய்யும் நிலைமை ஏற்பட்டது. தற்போது இந்த நிலை உள்ளதா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லா உதவிகளையும் இன்றைக்கு நமது அரசானது அரசு ஊழியர்களுக்கு செய்து கொண்டிருக்கிறது.

அரசுப் பணி நியமனம் கூடாது; வாரிசு நியமனம் கூடாது; புதிதாக பணி நியமனம் கூடாது; வாரிசு நியமனங்களும் ஆக மொத்தம் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 466 பேர் அரசு பணிகளில் பணியமர்த்தப்படுள்ளார்கள்.

அரசிடம் வைக்கும் கோரிக்கை நியாயமானது, எது ஆனாலும் அதை இந்த அரசு பரிசீலிக்கும். எவ்வளவு சீக்கிரம் நிறைவேற்ற முடியுமோ அதை கலைஞர் ஆட்சி நிறைவேற்றும். தேர்தல் நேரத்தில் வழங்கிய அத்தனை உறுதிமொழிகளையும் நிறைவேற்றிக் காட்டி இருக்கின்ற ஆட்சிதான் கலைஞர் ஆட்சி. சொன்னது மட்டும் அல்லாமல் சொல்லாததையும் செய்கின்ற அரசாக முதல்வர் கலைஞர் அரசு விளங்குகிறது. இந்த அரசுக்கு எப்போதும் உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தாக வேண்டும். சுழல்நிதி வாங்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ★

# நடப்பாண்டில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன!

தஞ்சாவூர் மாவட்டம்,
9.12.2010 அன்று, பேராவூரணி அருகே
சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம்,
முடச்சிக் காடு ஊராட்சி கலைஞர் நகரில்
ரூ.2 கோடியே 53 லட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்ட
தஞ்சை மாவட்டத்தின் 7–ஆவது சமத்துவபுரத்தை
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் கனவுகளை பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டுதலின்படி ஏழை மக்களின் நலனுக்காக மிகச் சிறப்பான முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார். கலைஞர் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஏழை மக்களின் முன்னேற்றத்திற் காகப் பாடுபட்டு வருகிறார். 1996–ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கிட தமிழகம் முழுவதும் சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என அறிவித்து சமத்துவபுரங்களுக்கு பெரியார் பெயர் சூட்டினார்.

1996–ஆம் ஆண்டு முதல் 2001 வரை தமிழகத்தில் 145 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வந்த ஆட்சிக்காலத்தில் சமத்துவபுரம் கட்டும் பணிகள் முடக்கி வைக்கப்பட்டது. மீண்டும் 2006–இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் வாழ்ந்த 95 ஆண்டு காலத்தை நினைவுகூரும் வகையில் 95 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என அறிவித்து அவற்றையும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்.

அத்துடன் 1996 முதல் அமைக்கப்பட்ட 145 சமத்துவ புரங்களிலும் தந்தை பெரியார் திருவுருச் சிலைகள் அமைக்கப் படும் என அறிவித்தபடி அனைத்து சமத்துவபுரங்களிலும் தந்தை பெரியார் திருவுருவச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.



தமிழகத்தில் சமத்துவபுரங்கள் அமைக்கும் திட்டம் மட்டும் அல்லாமல் ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் இலவச நிலப்பட்டா வழங்குதல், குடிசைமாற்று வாரிய வீடுகள் மேம்பாடு திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்படி ஆறு ஆண்டுகளில் 21 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம் என மக்கள் நலத்திட்டங்களை முதலமைச்சர் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் வேகமாக கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள குடிசை வீடுகளையும் 5 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாகக் கட்டுவதற்கு பயனாளிகளுக்கு தகுதி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இன்று சமத்துவபுரத்தில் வீடுகள் பெற்றுள்ள அனைத்து பயனாளிகளும், அனைத்து வசதிகளும் பெற்று சிறந்த வாழ்க்கை வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி, மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.ச.சு.பழநிமாணிக்கம், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.சு.சண்முகம், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்.

❖ ❖ ❖

# தமிழகம் முழுவதும் இணைய தளத்தில் மின் கட்டணம் செலுத்தும் வசதி!

சுமார் 1.77 கோடி தாழ்வழுத்த மின் நுகர்வோர்களாகவும் மற்றும் 7,000 உயர் மின் அழுத்த மின்நுகர்வோர்களாகவும் 2005–இலிருந்த நுகர்வோர்கள் தற்பொழுது முறையே 2.1 கோடியாகவும், 7,502 மின் நுகர்வோர்களாக பெருகி உள்ளனர். கடந்த 5 ஆண்டுகளில் இந்த வளர்ச்சி முறையே 18 விழுக்காடு மற்றும் 7 விழுக்காடு அதிகமாகும். மேலும் அடுத்த 5 ஆண்டுகளில் இவ்வளர்ச்சி பல்கிப் பெருக வாய்ப்பு உள்ளது.

சுமார் 1 கோடி மின்நுகர்வோர்கள் மாதந்தோறும் தங்களது தாழ்வழுத்த மின் கட்டணங்களை 2,711 வசூல் மையங்கள் மூலமாகச் செலுத்தி வருகிறார்கள். தற்பொழுது 15 நாட்கள் மின் கணக்கீடு மற்றும் 15 நாட்கள் வசூல் என்ற முறை நடைமுறையிலுள்ளது. வசூல் மையங்கள் பரவலாக இருந்த போதிலும் மின் கட்டணத்தை இறுதி நேரத்தில் செலுத்த வரும் மின் நுகர்வோர்களின் கூட்டம் சில நேரங்களில், சில இடங்களில் அதிகமாக இருப்பதால் நுகர்வோர்கள் நீண்ட வரிசையில் நின்று கட்டணம் கட்டும் சூழ்நிலைக்கு உள்ளாகிறார்கள்.



இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் (தற்பொழுது தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) தாழ்வழுத்த மின் கட்டணத்தை இணையதளத்தின் மூலம் செலுத்தும் பல்வேறு வழி முறைகளை ஏற்கெனவே சென்னையில் செப்டம்பர் 2008–இல் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு படிப்படியாக கோயம்புத்தூர் மண்டலத்திற்கும் ஜூன் 2010 முதல் விரிவு படுத்தப்பட்டு நடைமுறையிலுள்ளது.

மேற்கூறிய வசதியினை தமிழகம் முழுவதும் உள்ள தாழ்வழுத்த மின் நுகர்வோர்கள் பயன்படுத்தும் பொருட்டு மின் கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்தும் வசதி தற்பொழுது ரூபாய் 3 கோடி செலவில் புதிய வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை நிறுவி நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர்
திரு. **ஆர்க்காடு நா. வீராசாமி** அவர்கள்
1.12.2010 அன்று தொடங்கி வைத்தார்.

சென்னையிலுள்ள உயர் மின் அழுத்த மின் நுகர்வோர்களுக்கு நடைமுறையிலுள்ள மின்னணு கணக்கு சேவை மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி தற்பொழுது தமிழகம் முழுவதும் உள்ள உயர் மின் அழுத்த மின் நுகர்வோர்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் 1.12.2010 அன்று முதல் தொடங்கி வைக்கப்படுகிறது. மேற்கூறிய வசதிகளை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் தமிழக மின் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் 1.12.2010 முதல் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்கள். இந்த இணையதளத்தின் முகவரி www.tneb.in ஆகும். நுகர்வோர் இணையதளத்தின் மூலம் மின்கட்டணம் செலுத்தலாம்.

இவ்வசதிகள் மின் நுகர்வோர்கள் கடைசி நேரங்களில், சில இடங்களில் மின் நுகர்வோர்கள் நீண்ட வரிசையில் நின்று கட்டணம் செலுத்தும் சூழ்நிலையை களையும் பொருட்டு மற்றும் நுகர்வோர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டும் தொடங்கி வைக்கப்படுகின்றன.

தமிழகம் முழுவதும் உள்ள மின் நுகர்வோர்கள் இவ்வசதிகளை பயன்படுத்தி தங்களுடைய மின் கட்டணத்தை சிரமமின்றி செலுத்தி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ★




மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 132ஆவது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை காமராசர் சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா. சுப்ரமணியன், செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.கா. பாஸ்கரன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். (10.12.2010)



மகாகவி பாரதியார் அவர்களின் 129ஆவது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை காமராசர் சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா. சுப்ரமணியன், பனைத் தொழிலாளர் நல வாரியத்தலைவர் திரு.குமரிஅனந்தன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.கே.வி.தங்கபாலு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். (11.12.2010)

# சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு 2010-11ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.12.2010 அன்று வழங்கினார்

நடப்பு 2010–11ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 643 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில், பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ரூ.19.02 கோடியும், 30 ஆயிரத்து 79 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தின் கீழ் ரூ.8.66 கோடியும், 1,809 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூபாய் 4.73 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் ரூபாய் 32.41 கோடி கல்வி உதவித்தொகையாக 2 இலட்சத்து 3 ஆயிரத்து 531 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு பயனடையவுள்ளார்கள். இது கடந்த ஆண்டை விட ரூ.5.91 கோடி கூடுதல் ஆகும்.



சிறுபான்மையின மக்களை கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்படுத்தவும், சிறுபான்மையின மக்களுக்கான நலத்திட்டங்களை செம்மையாக நிறைவேற்றிடவும், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2007–08ஆம் ஆண்டு முதல் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் என்ற அமைப்பை தனியே இயங்க உத்தரவிட்டுள்ளார். இத்துறையின் கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன் பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகைகள் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கடந்த 2007–08 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பள்ளிப்படிப்பு பயிலுபவர்களுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 1,000 முதல் ரூபாய் 5,000 வரையிலும், விடுதியில் தங்கிப் பயில்பவராக இருப்பின் அதிகபட்சமாக ரூபாய் 10,000 வரையிலும், 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐடிஐ, ஐடிசி, பாலிடெக்னிக், இளங்கலை–முதுகலை பட்டபடிப்பு வரை, ஆசிரியர் பயிற்சிகள் உட்பட) பள்ளி மேற்படிப்பு பயிலுபவர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் 12,350 வரை பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகையாகவும், நான்காண்டு மற்றும் அதற்கு மேல் தொழிற்கல்வி–தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு அதிகபட்சமாக ரூபாய் 30,000 வரை தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2007–08 முதல் 2009–10 ஆம் ஆண்டு வரை பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.21.96 கோடியும், பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் ரூ.14.50 கோடியும் மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ரூபாய் 13.16 கோடியும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டு, இதன்மூலம் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 27 சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயலாளர் திரு.து.நா.இராமநாதன்,இ.ஆ.ப., சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ், சிறுபான்மையினர் நலத்துறை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் ஆணையர் (பொ) திரு.பெ.மு.பஷீர் அஹமது, மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறையின் ஆணையர் திரு.பா.அண்ணாமலை, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

## மதுரை மாவட்டத்தில்

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், கூட்டுறவுத் துறையில் ஏழை, எளிய மக்களின் பொருளாதார வாழ்வு மேம்பாடு

கூட்டுறவு என்பது ஒரு மக்கள் இயக்கம். கிராமப்புரங்கள் மற்றும் நகர்புரங்களில் வாழும் நலிவுற்ற ஏழை, எளிய மக்களை பொருளாதார ரீதியாக வாழ்விப்பதற்கு உருவாக்கப்பட்டதுதான் இந்த கூட்டுறவு இயக்கம்.

கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி தெளிவாக சொல்ல வேண்டுமானால் இங்கிலாந்து நாட்டில் தொழில் புரட்சியின் போது கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டது. இந்த உணவுப் பற்றாக்குறையை போக்கும் விதமாக இங்கிலாந்து நாட்டில் உள்ள ராக்டேல் கிராமத்தில் 28 நெசவுத் தொழிலாளர்களால் கூட்டுறவு பண்டகசாலை துவக்கப்பட்டது, இந்த பண்டகசாலையில் நெசவுத் தொழிலாளர்களால் தலா 1 பவுண்ட் வீதம் முதலீடு செய்து ஒரு பண்டகசாலை ஏற்படுத்தி அவர்களது உணவுத் தேவையை வெற்றிகரமாக பூர்த்தி செய்து கொண்டனர். இவ்வாறு இங்கிலாந்து நாடு பொருளாதார வாழ்வில் ஏற்றம் கண்டதன் காரணமாக கூட்டுறவு இயக்கம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது.



அதேபோன்று நமது இந்தியாவில் முதல் பிரதமராக பதவி வகித்த திரு.ஜவஹர்லால் நேரு அவர்கள் கிராமம் மற்றும் நகர்புரத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், இந்தியாவின் வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, உணவுப் பற்றாக்குறையை அறவே போக்கவேண்டும் என்ற தலையாய லட்சியத்தை மனதில் கொண்டு முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை கொண்டு வந்தார்.

இந்த ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும் எனில் கூட்டுறவின் பங்கு மிக அவசியம் என்பதனை ஆய்வு செய்த மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு அவர்கள் ஜனநாயகம் இயக்கமான கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்து, அதிக அளவில் நிதியுதவி ஒதுக்கீடு செய்து ஏழை, எளிய விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி கடனுதவிகள் வழங்குவதின் மூலமே உணவுப் பற்றாக் குறையிலிருந்து இந்தியா ஒரு தன்னிறைவு பெற்ற நாடாகத் திகழ செய்யவேண்டும் என்பதில் முழு கவனம் செலுத்தினார்.

எனவே கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகள், அதன் நோக்கங்கள், திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை பொதுமக்களிடம் விளக்குவதற்காகவும், பொதுமக்களை அதிகளவில் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேர்க்கவும், முன்னாள் இந்தியப் பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 14ஆம் தேதியைத் தேர்வு செய்து, அகில இந்திய கூட்டுறவு வாரவிழாவாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டதன் பேரில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நவம்பர்






14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை கூட்டுறவு வாரவிழா மதுரை மாவட்டத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1904ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருர் கிராமத்தில் முதல் முதலாக கூட்டுறவு கடன் சங்கம் தொடங்கப்பட்டு தற்போது தமிழ்நாட்டில் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட 39 வகையான கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த அடிப்படையில் கூட்டுறவுத் துறையின் மூலமாக மதுரை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**பயிர்க் கடன் தள்ளுபடி**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 31.3.2006 அன்று நிலுவையில் இருந்த விவசாயிகளின் பயிர்க் கடன் மத்திய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன்கள் மொத்தம் 76,128 விவசாயிகளுக்கு ரு.1.40 கோடி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது,

**1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி**

1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ் மதுரை மண்டலத்தில் 8,96,000 குடும்ப அட்டைகளுக்கு பிரதி மாதம் 12,000 மெ.டன் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மானிய விலையில் மளிகைப் பொருட்கள்**

மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 10 மளிகைப் பொருட்கள் கொண்ட பொட்டலம் ரூ.25/–க்கு நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பிரதி மாதம் நியாயவிலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு 640 மெ.டன், உளுத்தம் பருப்பு 340 மெ.டன், பாமாயில் 580 மெ.டன், ஆட்டா 200 மெ.டன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மின்னணுத் தராசு**

குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான எடை அளவில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்ய மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகளிலும் மின்னணு எடை தராசு நிறுவப்பட்டுள்ளது.

**நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்கள் நியமனம்**

மதுரை மாவட்டத்தில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் இருந்த காலிப்பணியிடங்களில் 174 விற்பனையாளர்கள் 27 கட்டுனர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதம் உள்ள 102 விற்பனையாளர்கள் மற்றும் 238 கட்டுனர்கள் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

**பயிர்க் கடன்**

விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் பெற்ற உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தினால் வட்டியே இல்லை. இத்திட்டத்தின்படி கடந்த ஆண்டு 14,239 விவசாயிகளுக்கு 39 கோடி பயிர்க்கடன் வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.50 கோடி குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 10,241 விவசாயிகளுக்கு ரூ.40 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் 48,324 விவசாயிகளுக்கு ரூ.136.6 கோடி பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**பயிர்க் காப்பீடு**

ஏழை, எளிய விவசாயிகள் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்படும் பொழுது காப்பீடு தொகை அளிக்கப்படுகிறது. இதுவரை மதுரை மாவட்டத்தில் 7,945 விவசாயிகளுக்கு ரூ.2.20 கோடி பயிர்க் காப்பீட்டு இழப்பீடாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**உர விநியோகம்**

மதுரை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு டிஏபி, யூரியா, பொட்டாஷ், காம்ளக்ஸ், சல்பேட் போன்ற உரங்கள் எவ்வித தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினசரி SMS மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உள்ள உர இருப்பு கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 18000 மெ.டன் உரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**நேரடிக் கொள்முதல்**

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆணடு ஒன்றுக்கு விவசாயிகளிடமிருந்து, 13,000 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 27,000 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**நிரந்தர வைப்புகள்**

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து ரூ.650 கோடி வைப்புகள் பெறப்பட்டுள்ளது. இவற்றிற்கு மற்ற வங்கிகளை விட அதிக பட்சமான வட்டி விகிதம் வழங்கப்படுகிறது.

**கூட்டுறவு வங்கிகள் நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்**

மதுரை மாவட்டத்தில் இதுவரை பல்வேறு கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் ரூ.1,500 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

**சங்கங்களைப் புத்துயிரூட்டுதல்**

மதுரை மாவட்டத்தில் உள்ள 182 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 2005/06ல் 18 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களே லாபத்தில் இயங்கி வந்தன. தற்போது 131 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன. 31.3.2011க்குள் அனைத்து கடன் சங்கங்களும் லாபத்தில் இயங்கும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் புத்துயிரூட்டப்பட்டுள்ளது. அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளும், கூட்டுறவு விற்பனை சங்கங்களும் லாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

**டாப்செட்கோ, டாம்கோ கடன்**

மதுரை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களுக்கு மிக குறைந்த வட்டியில் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

டாப்செட்கோ திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட 760 நபர்களுக்கு குறைந்த வட்டியில் 154 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களுக்கு 142 நபர்களுக்கு ரூ.40 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுப் பொறுப்புக் குழு**

மதுரை மாவட்டத்தில் சிறு,குறு மற்றும் குத்தகை விவசாயிகள் பயன் அடையும் பொருட்டு இதுவரை 900 கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூ.90 இலட்சம் சுழல்நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் சிறுவணிகர்கள் பயன்பெறும் பொருட்டு சிறுவணிகர் கூட்டுப்பொறுப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டு நகர கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மூலமும் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 78 சிறு வணிகர் கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.30 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**விவசாய மருத்துவப் பயன்பாட்டு மையம்**

மதுரை மாவட்டத்தில் விவசாயிகள் குறைந்த விலையில் மண் பரிசோதனை மற்றும் நீர் பரிசோதனை, விவசாய இடுபொருட்கள், விவசாய வல்லுநர்களின் பரிந்துரைகள் பெறுவதற்கான மருத்துவப் பயன்பாட்டு மையம் உறங்கான்பட்டி, அலங்காநல்லூர், மணல்பட்டி, கள்ளிக்குடி சத்திரம், விரகனூர், சாத்தங்குடி, பேரையூர், உசிலம்பட்டி ஆகிய 8 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த வேளாண் சேவை மையம்**

விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விவசாயக் கருவிகள் வாடகைக்கு வழங்குவதற்காக 8 ஒருங்கிணைந்த வேளாண் சேவை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் டிராக்டர், நடவு செய்யும் இயந்திரம், தெளிப்பான்கள், கலப்பைகள் ஆகியவை விவசாயிகளுக்கு குறைந்த செலவில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

மதுரை மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் கட்டமைப்பு, வியாபாரம், வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த ரூ.24 கோடியில் திட்டம் வகுக்கப்பட்டு 2008/09 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 35 அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 102 கூட்டுறவு கிட்டங்கிகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் இரும்பு பாதுகாப்பு பெட்டகம் மற்றும் அபாய ஒலிப்பான்கள் மற்றும் நவீன கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் 500 மெ.டன் கிட்டங்கி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.40 லட்சம் செலவில் கூட்டுறவு அச்சகங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

**புதிய மருந்தகங்கள்**

மதுரை மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு ஐந்து புதிய கூட்டுறவு மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அங்கு விற்பனை செய்யப்படும் மருந்துகளுக்கு விற்பனை பட்டியல்கள் வழங்கப்பட்டு அதில் 15% தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வால் தனியார் மருந்துக் கடைகளிலும் பொதுமக்களுக்கு தள்ளுபடி வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**மின்னணு நிருவாகம்**

மதுரை மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் உரம் விற்பனை மற்றும் இருப்பு விவரங்கள் குறுஞ் செய்தி (SMS) மூலம் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, தினசரி உரம் இருப்பு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளிலும் உள்ள குடிமைப் பொருட்களின் இருப்பு, விற்பனை விவரம் குறுஞ்செய்தி (SMS) மூலம் பெறப்பட்டு, இணையத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது, இதனால் நியாயவிலைக் கடைகளின் விநியோகம், கடை திறப்பு மற்றும் சரக்கின்மை (Stock out) ஆகியவை உரிய முறையில் கண்காணிக்கப் படுகிறது,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கியில் இருந்து லாரி மூலம் நகர்வு செய்யப்படும் குடிமைப் பொருட்கள், நியாய விலைக் கடைகளுக்கு சென்று அடையும் வரை ஈ டிராகிங் (E-Tracking) மூல அலுவலகத்தில் இருந்தே தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களில் பில்லிங் மிஷின் மூலம் விற்பனை பட்டியல்கள் போடப்பட்டு வருகிறது, இதனால் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் இயங்குகிறதா? எனவும் விநியோகம் செய்யப்பட்ட மண்ணெண்ணெய் அளவு இருப்பு விவரம் ஆன்லைனில் உடனுக்குடன் அலுவலர்கள் அறிந்து கொண்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**எதிர்கால திட்டங்கள்**

மதுரை மாவட்டத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி கணினிமயமாக்கப்பட்டுள்ளது. ஏனைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அனைத்தும் 31.3.2011க்குள் கணினி மயமாக்கப்படவுள்ளது.

500 விவசாய கூட்டுப்பொறுப்புக் குழுக்களும் மற்றும் 500 சிறு வணிகர் கூட்டுப்பொறுப்புக் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் அறுவடை காலத்தில் கூட்டுறவுசங்கங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து 30,000 டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

100 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தனி நபர் பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறுவப்படவுள்ளன.

அனைத்து வட்டாரங்களிலும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வட்டாரத்திற்கு 2 ஒருங்கிணைந்த வேளாண் மையமும் மேலும் 25 பொதுச் சேவை மையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன.

கரும்பு, காய்கறி, பருப்பு சாகுபடிக்கு முன்னுரிமை அடிப்படையில் சொட்டுநீர் பாசனக் கடன் வழங்கப்படும். இதில், நடப்பு ஆண்டில் ரூ.3 கோடி இலக்கு நிர்ணயிக்கப் பட்டு இதுவரை 40 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு எதிர்வரும் விவசாய அறுவடை காலங்களில் அவர்கள் பயன்பெறும் பொருட்டு குறைந்த வட்டியில் ரூ.10 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் ரூ.500 கோடி வைப்புகள் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 31.3.2011க்குள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டடங்களும் நவீன முறையில் பழுதுபார்க்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டு புது பொலிவு ஏற்படுத்தி சங்க உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிறந்த சேவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மதுரை மாவட்டத்திலுள்ள கிராமப்புரங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் வாழும் நலிவுற்ற பிரிவைச் சார்ந்தவர்களை வாழ்விப்பதற்கு கூட்டுறவு இயக்கம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மகத்தான சாதனை புரிந்து வருகிறது. வானில் மேகங்கள் கூட்டம் கூட்டமாக கூடி, கலந்து மழை பொழிந்து மற்றவர்களுக்கு நன்மை செய்வது போல் கூட்டுறவு இயக்கம் மக்களுக்காக தம்மை அர்ப்பணித்து சமுதாய சேவை செய்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

**– இரா.அண்ணா,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.

★ ★ ★



மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்,
கடலூர் மாவட்டம், வடலூர் அருகே,
மழை வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களைப்
பார்வையிட்டு நிவாரணப் பணிகளை
மேற்கொண்டார். (6.12.2010)

R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

கரம் இணைப்போம் | எய்ட்ஸை ஒழிப்போம் | வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும் கட்டி அணைப்பது போன்ற சாதாரண பழக்க வழக்கத்தினால் எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர் பயன்படுத்திய கழிவறையைப் பயன்படுத்துவது அல்லது பொருட்களை மாற்றிக் கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ் பரவாது.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி. கிருமி உள்ள இரத்தம் மூலம் மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம் செய்யப்படாத பிளேடுகளை, ஊசிகளை பகிர்ந்துகொள்வதால் பரவும்.



**ஒரு துளி இரத்தம் போதுமே உங்கள் உடல் நலனை அறிய**

திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம் ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்



மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களை (ICTC) அணுகவும்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை தவிர்த்தல்.

திருமணத்திற்கு பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே பயன்படுத்துதல். இரத்த தானம் செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம் எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால் பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால் உரிய சிகிச்சை மேற்கொண்டால் தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு பரவாமல் தடுக்கலாம்.



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி அழித்து விட வேண்டும். இந்த உபகரணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

## சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்

82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.
இலவச தொலைபேசி : 1913

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010